Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 07 சுபகிருது வருடம், ஆனி மாதம் 16ஆம் திகதி வியாழக்கிழமை (30.06.2022) ஹிஜ்ரி - 1443, ஜுல்ஹஃதா - 29, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## மத்திய வங்கி ஆளுநரின் பதவிக்காலம் நீடிப்பு

**பரிந்துரை செய்தார் பிரதமர்**

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு பரிந்துரைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

02 பக்கம்

## ஜூலை 22 வரையில் பெற்றோல் இல்லை!

**பிரதமரின் தலைமை அதிகாரி அறிவிப்பு**

02 பக்கம்

# கந்தக்காட்டில் கடும் மோதல்

**ஒருவர் பலி - 600இற்கும் மேற்பட்டோர் தப்பியோட்டம் தப்பியோடியவர்களில் 232 பேர் கைது; அதிகாரிகள் தாக்கியதாக வெளிவந்த தகவலால் சர்ச்சை**

பொலன்னறுவை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அங்கிருந்து 600இற்கும் மேற்பட்டோர் தப்பியோடியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தடுப்பு முகாமில் இருந்த கைதியொருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்ததாகவும்...



02 பக்கம்

# கடவுச்சீட்டு ஒருநாள் சேவை 3 மாவட்டங்களுக்கு விஸ்தரிப்பு

**அமைச்சர் தம்மிக்க பெரேரா அறிவிப்பு**



02 பக்கம்



எரிபொருள் நெருக்கடி, பொதுப் போக்குவரத்திலும் தாக்கத்தை செலுத்தியுள்ளதால் பெரும்பாலான மக்கள் ரயில் சேவையை நம்பியுள்ளனர். அதனால் ரயில் நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிகளவில் இருக்கிறது. கோட்டை ரயில் நிலையத்தின் காட்சி இது. (படப்பிடிப்பு - லலித் பெரேரா)

## பெற்றோல் எனக் கூறி சிறுநீர் விற்பனை

**நீர்கொழும்பில் சம்பவம்**



02 பக்கம்

## எரிபொருள் கொள்வனவு பேச்சுக்கு ஜனாதிபதி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விரைவில் விஜயம்

**மஹிந்தானந்த எம்.பி. தகவல்**



எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான பேச்சு நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

## மகா சங்கத்தின் ஆலோசனையை பின்பற்றாமையே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம்

**அஸ்கிரிய மகாநாயக்க தேரர் சுட்டிக்காட்டு**

மகா சங்கத்தினரின் ஆலோசனையை அதிகாரிகள் பெறாததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்காகொட ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார். கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேரர்,...

02 பக்கம்



வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம் - யாழ். நிருபர்)






## நல்லூர் திருவிழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடு



**யாழ். மேயர் அறிவிப்பு**

*யாழ். செய்தியாளர்*

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று...

02 பக்கம்

## விமான எரிபொருள் இறக்குமதி: தனியாருக்கு அனுமதி வழங்க முடிவு

விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்ய தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமான சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் எரிபொருள் களஞ்சியசாலை பொறுப்பாளர்களுக்கும் சிவில் விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கும்...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

பொலிஸ் சும்மா தேடி அலையத் தேவையில்ல... கந்தகாட்டிலிருந்து தப்பித்து வந்தவங்கள் வெளியிலுள்ள நிலைமையை பார்த்து சகிக்காமல் திருப்பி அங்கேயே போயிடுவாங்கள்..





அரச வங்கிகள், ஆசிரியர்கள், மின்சார சபை, விவசாய நிறுவனங்களின் தொழிற் சங்கங்கள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று கோட்டை ரயில் நிலைய முன்றலில் நடத்தின. (அஷ்ரப் ஏ சமத்)

### உஷ்



பிரதமர் ரணில் நேற்று ஊடகங்களின் பிரதிநிதிகளை சந்தித்தாராம். ஆனால் தெரிவு செய்யப்பட்ட அதுவும் ரணிலுக்கு வக்காலத்து வாங்கும் ஊடகங்களின் பிரதிநிதிகள் மாத்திரமே அந்த கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனராம்.

ராஜபக்ஷக்களை சுற்றியிருந்த ஒரு கூட்டம் எப்படி அவர்களை தவறாக வழிநடத்தியதோ, அப்படியே ரணிலை சுற்றியிருக்கும் கூட்டம் அவரை தவறாக வழிநடத்திக்கொண்டிருப்பதன் விளைவே இப்படியான விடயங்கள் என்று கூறுகின்றனர் மூத்த ஊடகர்கள்.

# எரிபொருள் பதுக்கல்: இதுவரை 768 பேர் கைது

நாட்டில் எரிபொருள் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், எரிபொருளை பதுக்கி வைத்திருந்த 768 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளின்போது, இதுவரை 23 ஆயிரத்து 728 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, 41 ஆயிரத்து 382 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 11 ஆயிரத்து 876 லீற்றர் மண்ணெண்ணெய்யும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



எரிபொருள் வரிசையில் நிற்பவர்கள் உணவு வேளையில் சவன் சாப்பாட்டை உண்ணும் காட்சி கொழும்பில்...

# பொதுமக்களுக்கான கொன்சியூலர் சேவைகள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில்

நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு, ஜூன் 30 முதல் ஜூலை 10ஆம் திகதி வரை திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குமென வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

இதே ஏற்பாடுகள் யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களுக்கும் பொருந்தும் என்பதுடன், அந்த அலுவலகங்களும் இந்த நாட்களிலேயே சேவைகளை வழங்கும்.

அவசர விசாரணைகளுக்காக பின்வரும் மின்னஞ்சல் முகவரிகளினூடாக தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கொன்சியூலர் விவகாரப் பிரிவு - கொழும்பு - consular@mfa.gov.lk

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - யாழ்ப்பாணம் - jaffna.consular@mfa.gov.lk

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - மாத்தறை - matara.consular@mfa.gov.lk

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - கண்டி - kandy.consular@mfa.gov.lk

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - திருகோணமலை - trincomalee.consular@mfa.gov.lk

பிராந்திய கொன்சியூலர் அலுவலகம் - குருநாகல் - kurunegala.consular@mfa.gov.lk.

# இன்றும் நாளையும் அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

*(மாளிகைக்காடு நிருபர்)*

எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ள வழிசெய்தல் மற்றும் கிழக்கு மாகாணத்திற்கென தனியான பாடசாலை அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அம்பாறை மாவட்ட ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் பாடசாலை பகிஷ்கரிப்பு போராட்டம் இன்றும் நாளையும் இடம்பெறும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தினர் நேற்று (29) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தலைவர் ஜெஸ்மி மூஸா தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை பணிப்பகிஷ்கரிப்பு தொடர்பான அறிவிப்பை கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளருக்கு சங்கம் அறிவித்திருப்பதாகவும், அவர்களின் அறிவித்தல் கடிதத்தில் எரிபொருள் பிரச்சினையை மையமாகக்கொண்டு ஜூலை10ஆம் திகதி வரை பாடசாலைகளை மூடுமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளதனை சுட்டிக் காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.



மேலும், இக்காலப்பகுதிக்குள் ஆசிரியர்களுக்கான சொந்த விடுமுறை தொடர்பிலும் தெளிவான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளை நடத்துமாறு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பினால் மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் அதனை மேற்கொண்ட நிலையில், சில வலயங்களில் பாடசாலை மூடல் தொடர்பான அறிவிப்பு ஆசிரியர்களுக்கிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகின்றது.

இதனடிப்படையில், தொழிற்சங்கம் என்ற ரீதியில் ஆசிரியர்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை நாம் செவிமடுக்க வேண்டியுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள வலயங்களிலும் வெளிப்பிரதேச ஆசிரியர்கள் செல்லாமையினால் பாடசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைத்துள்ளன.

எரிபொருள் பிரச்சினை என்பது ஒரு வலயத்திற்கானது மாத்திரமல்ல என்பதனை எல்லோரும் அறிவார்கள்.

எனவே, எரிபொருள் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமொன்று உருவாகும் வரை கல்வியமைச்சின் அறிவித்தலினை மாகாணத்திற்கு அறிவிக்க வேண்டும். இதனை வலியுறுத்தி ஆசிரியர்கள் இன்றும் (30) நாளையும் (01) பாடசாலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதற்கான தீர்வு எட்டவில்லையாயின் இதனை மேலும் தொடர வாய்ப்புள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## நல்லூர் திருவிழாவை...

யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மகோற்சவம் வழமைபோன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறுமென யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு பின்னர் நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மாநகர முதல்வர் மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஓகஸ்ட் 1ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்று வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட் செல்ல முடியாது.

அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கெமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியும். ஆனால், இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின்போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

இம்முறை திருவிழாவின்போது ஒவ்வொரு தனி மனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும் இவை தவிர எதிர்வரும் காலங்களில் தேவைப்படும்போது கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவோம் என்றார். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், மாநகர பிரதிமுதல்வர், நல்லூர் ஆலய பரிபாலகரின் பிரதிநிதிகள், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜூலை 22 வரையில்...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஜூலை 22ஆம் திகதி வரை பெற்றோல் இறக்குமதியைப் பெற்றுக்கொள்ள முடியாது என பிரதமரின் தலைமை அதிகாரியான சாகல ரத்நாயக்க நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதி இருந்தாலும், எரிபொருள் இறக்குமதியை அணுக முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது 11,000 மெட்ரிக் தொன் டீசல், 5,000 மெட்ரிக் தொன் பெற்றோல், 30,000 மெட்ரிக் தொன் உலை எண்ணெய் மற்றும் 800 மெட்ரிக் தொன் ஜெட் எரிபொருள் உள்ளது.

ஜூலை 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை 38,000 மெட்ரிக் தொன் டீசல் பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய இறக்குமதி நாட்டுக்கு வரும் வரை தற்போதுள்ள டீசல் கையிருப்பு அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே கிடைக்கும் என்றும் ரத்நாயக்க தெரிவித்தார்.

அடுத்த நான்கு மாதங்களுக்கு லிட்ரோ நிறுவனம் 100,000 மெட்ரிக் தொன் எரிவாயுவைக் கொள்முதல் செய்யும் என்றும், அந்த ஏற்றுமதிகள் ஜூலை 06, 10, 16, 19, 21 மற்றும் 31ஆம் திகதிகளில் வந்து சேரும் என்பதால் எரிவாயு விநியோகத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் உதவியுடன் லிட்ரோ நிறுவனம் எரிவாயுவை கொள்வனவு செய்யும் கொள்வனவு ஒப்பந்தத்தில் இன்று அல்லது நாளை கைச்சாத்திடப்படவுள்ளது.




## எரிபொருள் கொள்வனவு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் இடையில் எரிபொருள் கொள்வனவுக்கான உடன்படிக்கையை எட்டுவதற்கு தொலைபேசியில் உரையாடுவதற்கு வசதியாக இலங்கைக்கான ரஷ்யத் தூதுவருடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஜூலை 10ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்து எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கான விரிவான பொறிமுறையை அரசாங்கம் வகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், பெற்றோலிய வள அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்யும் ஏழு நிறுவனங்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடியதாகவும், எரிபொருள் விநியோகம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கந்தக்காட்டில்...

அதன் பின்னர் முகாமுக்குள் கிட்டத்தட்ட 1000 பேர் கலவரத்தில் ஈடுபட ஆரம்பித்ததாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றியிருந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மீது கைதிகள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியதாகவும்,நேற்றுக் காலை சுமார் 500-600 கைதிகள் பாதுகாப்பு வேலிகளை உடைத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களில் 232 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சியோரை கண்டுபிடிக்க விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகாரி ஒருவர் தாக்குதல் நடத்தியதாக வெளிவந்துள்ள செய்திகளையடுத்து, நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்த அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, இந்த விவகாரம் குறித்து நீதியான விசாரணை நடத்தப்பட்டு தவறு செய்தவர்கள் எவரும் இருந்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

## கடவுச்சீட்டு ஒருநாள்...

*(நா.தினுஷா)*

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திலுள்ள நெரிசலை குறைப்பது தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்படி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதற்கு தேவையான சகல ஆவணங்களையும் முழுமைப்படுத்தியுள்ள நபர்களுக்கு, விரைவாக கடவுச்சீட்டை பெற்றுக்கொடுக்க தனியான பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கும் தம்மிக்க பெரேரா நடவடிக்கை எடுத்துள்ளார்.

பத்தரமுல்ல, சுஹுருபாயவிலுள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் வெளிநாட்டு கடவுச்சீட்டு வழங்கும் பிரதான காரியாலயத்தின் இந்த விசேட பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட ஆவணங்களை வைத்துள்ளவர்கள் இந்த வரிசையில் காத்திருக்காமல், இந்த விசேட பிரிவுக்குச் சென்று விரைவாக கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியுமென அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

### மேலும் மூன்று மாவட்டங்களில் ஒருநாள் கடவுச்சீட்டு சேவை

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் (04) வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொடுப்பதற்கான ஒரு நாள் சேவையை மூன்று மாவட்டங்களில் பெற்றுக்கொள்ள முடியுமென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மாத்தறை, கண்டி மற்றும் வவுனியா ஆகிய நகரங்களில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திலுள்ள காரியாலயங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஒருநாள் சேவையின் அடிப்படையில் கடவுச்சீட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கடவுச்சீட்டு புகைப்பட பிரச்சினைக்கு தீர்வு

கடந்த காலங்களில், கடவுச்சீட்டுக்காக அனுமதிபெற்ற புகைப்பட பிடிக்கும் இடங்களினூடாக, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் தரவு கட்டமைப்புக்கு புகைப்படங்களை தரவேற்றம் செய்யும்போது அதில் பிரச்சினை நிலை காணப்பட்டது.

காலை 10.00 முதல் பகல் 01.00 மணி வரையான காலப்பகுதியில் பாரியளவில் புகைப்படங்கள் அனுப்பப்படுவதால் தரவு கட்டமைப்பில் காலதாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக சேர்வரில் போதியளவில் இடவசதியின்மையோகும்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை தேடிப்பார்ப்பதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா நேற்று (29) காலை அங்கு சென்றிருந்ததுடன், அதன்போது இந்த பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வை பெற்றுக்கொடுத்திருந்தார்.

அதற்கமைய, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இந்த தொழில்நுட்பப் பிரச்சினைக்கு நீண்டநாள் தீர்வை பெற்றுக்கொள்ளும் வரை, தனது தனிப்பட்ட நிதியிலிருந்து 09 இலட்சம் ரூபாவை செலவு செய்து இந்த புகைப்படங்களை தரவேற்றம் செய்வதற்காக அந்த திணைக்களம் தம்மிக்க பெரேராவினால் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை நாளாந்தம் அறிக்கையிடல்

நாட்டில் இடம்பெறும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, சுற்றுலாத்துறை மீது கடும் எதிர்பார்ப்பு இருப்பதால் நாளாந்தம் சுற்றுலாத்துறை தொடர்பிலான தகவல்களை தனக்கு பெற்றுக்கொள்ள அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதற்கமைய, எதிர்வரும் 04ஆம் திகதியிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை ட்விட்டர் வலைதளத்தினூடாக, நாளாந்தம் வெளிப்படுத்தவும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாளாந்தம் காலை 09.00 மணிக்கு அதற்கு முதல் நாள் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் அதன் ட்விட்டர் கணக்கினூடாக அறிக்கையிடப்படவுள்ளது.

### 'ஸ்வர்னமய பாராதிசய' விசா வேலைத்திட்டத்துக்கு விரைவான தீர்வு

தம்மிக்க பெரேரா அமைச்சராக நியமிப்பதற்கு முன்னர் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட யோசனையின் அடிப்படையில் முன்னெடுக்கப் பட்டு வரும், ஸ்வர்னமய பாராதிசய, விசா வேலைத்திட்டத்தினூடாக நாட்டுக்கு வெளிநாட்டு வருமானத்தை கொண்டு வரும் நடவடிக்கை தற்போதுவரையில் தாமதத்தை சந்தித்து வருகின்றது. அந்த நிதியை வைப்பிலிடுவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு இதுவரையில் அனுமதி கிடைக்காமையினாலேயே இந்த சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடி விரைவாக தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தீர்மானித்துள்ளார்.

### திருமணமானவர்களுக்கான விசா காலம் நீடிப்பு

இலங்கை பிரஜைகளை திருமணம் செய்துகொண்ட வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு, இலங்கையில் இதுவரையில் கிடைத்த ஒரு வருட கால விசா பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, அந்த காலத்தை ஐந்து வருடமாக்குவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 04ஆம் திகதியிலிருந்து ஸ்பவுஸ் விசா (Spouse Visa) தொடர்பில் இந்த தீர்மானம் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்குமென அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய வங்கி ஆளுநரின்...

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநரின் பதவிக்காலம் இன்றுடன் நிறைவடையவிருந்தது. நந்தலால் வீரசிங்கவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு பிரதமர் தீர்மானித்திருந்த நிலையில், மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு தினேஷ் வீரக்கொடியின் பெயரை ஏற்கனவே ரணில் பரிந்துரை செய்திருந்தார்.

எனினும், அந்த யோசனைக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்காத நிலையில், நந்தலால் வீரசிங்கவின் பதவிக் காலத்தை நீடிக்க பிரதமர் ரணில் பரிந்துரைக்காமல் இழுத்தடிப்புச் செய்துவந்தார்.

இந்த நிலையில் பிரதமரின் இந்த நடவடிக்கை அரசாங்கத்திற்குள் கடும் எதிர்ப்பை உருவாக்கியது. நந்தலால் வீரசிங்கவை பதவியில் இருந்து நீக்கினால், பிரதமர் மிகவும் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர் ஜகத் புஸ்பகுமார, எழுத்து மூலம் பிரதமருக்கு அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை மீண்டும் பதவியில் அமர்த்துமாறு பரிந்துரைத்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

## விமான எரிபொருள்...

இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

விமானங்களுக்கான எரிபொருளை கொண்டு வரும் செயற்பாட்டை இதுவரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே முன்னெடுத்திருந்தது.

டொலர் நெருக்கடியின் காரணமாக விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்டு வருவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

அதற்கமைய, தற்போதுள்ள சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு, விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்டு வரும் செயற்பாட்டை தனியாருக்கு வழங்குவதாயின், அதற்கான முழுமையான ஆதரவை வழங்குவதாக எரிபொருள் களஞ்சியசாலை பொறுப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதற்கு முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத்தருவதாக விமான சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## பெற்றோல் எனக் கூறி...

நீர்கொழும்பில் எரிபொருளின்றி வீதியில் நின்ற நபர் ஒருவருக்கு சிறுநீரை எரிபொருளாக விற்பனை செய்த நபரொருவர் தொடர்பில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

அவசர வேலையாக சென்று கொண்டிருந்தவரின் மோட்டார் சைக்கிளில் இருந்த எரிபொருள் தீர்ந்து போயுள்ளது.

இந்த நிலையில், குறித்த நபர் மோட்டார் சைக்கிளை தள்ளிக்கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீர்கொழும்பு தெல்வத்தை சந்தி கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர், மோட்டார் சைக்கிளில் எரிபொருள் இன்றி நின்ற நபரை அணுகி எரிபொருள் தேவையா எனக் கேட்டு தன்னிடம் எரிபொருள் இருப்பதாக கூறியுள்ளார்.

1000 ரூபா பணத்திற்கு 375 மில்லி லீற்றர் எரிபொருள் பெற்றுக் கொடுக்க குறித்த நபரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் பெற்றவர், அதனை விற்பனை செய்த நபரிடம் 5000 ரூபாவை கொடுத்து மீதிப் பணத்தை கோரியுள்ளார். பின்தொடர்ந்தால் மிகுதிப்பணத்தை தருவதாக கூறிய எரிபொருள் விற்ற நபர் அங்கிருந்து புறப்பட்டுள்ளார்.

எரிபொருளை வாங்கியவர் மோட்டார் சைக்கிளில் அந்த நபரை பின்தொடர்ந்து செல்ல முயற்சித்தபோதிலும் மோட்டார் சைக்கிள் இயங்கவில்லை.

பின்னரே பெற்றோல் என்று சிறுநீரை பெற்று ஏமாறியமை தெரியவந்துள்ளது.

எரிபொருள் விற்ற நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மகா சங்கத்தின்...

இலங்கையின் மதகுருமார்கள் தமக்கு வழங்கிய ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகளை அரச அதிகாரிகள் புரிந்து கொள்ளவில்லை.

மக்கள் மீதான பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை குழந்தைகளும் புரிந்துகொள்ள முடியும் என்றார். பொருளாதார முறைகேடுகள் பற்றி மதத் தலைவர்கள் வழங்கும் அறிவுரைகளை அரசியல்வாதிகள் அறியாமையே பொருளாதாரம் வீழ்ச்சியடைய காரணமாகுமெனவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

# ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ செயலணியின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு





‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற கொள்கைகளுக்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலிணியின் அறிக்கையில், அந்த செயலணியின் தலைவர் கலகொடஅத்தே ஞானசார தேரரினால் நேற்று (29) கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் நிலைப்பாடுகள் என்பவற்றை கருத்தில் கொண்டு, ஒரே கொள்கையிலான திட்டங்களை வகுப்பதற்கான யோசனைகளை முன்வைப்பதற்காக கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி மற்றும் நவம்பர் மாதம் 06 திகதிகளில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியினூடாக இந்த ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டது.

பேராசிரியர் ஷாந்தி நந்தன வஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேட் மஞ்சுள, வைத்தியர் என். ஜீ. சுஜீவ பண்டிதரத்ன, சட்டத்தரணி இரேஷ் செனவிரத்ன, சட்டத்தரணி டப்ள்யூ.பீ.ஜே.ஆர். சஞ்ஜய பண்டார மாரம்பே, ஆர்.ஏ.எரந்த குமார நவரத்ன, பானி வேவல, மௌலவி எம்.ஏ.எஸ். மொஹமட், யோகேஸ்வரி பட்குணராஜா மற்றும் ஐயம்பிள்ளை தயாநந்தராஜா ஆகியோர் உள்ளடங்கியவர்கள் பங்குபற்றலுடன் இந்த ஜனாதிபதி செயலணி நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சிரேஷ்ட உதவி செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்க இந்த குழுவின் செயலாளராக கடமையாற்றினார்.

தொழிலாளர்கள், அரச சார்பற்ற அமைப்புகள், மதக் குழுக்கள், பல்வேறு மக்கள் தரப்புகள், பல்கலைக்கழக சமூகம், சட்டத்துறை பிரமுகர்கள் உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ளடங்கும் வகையில் ஆயிரத்து 200 இற்கும் அதிகமானவர்களிடம் கருத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், 43 பரிந்துரைகள் உள்ளடங்கிய 08 அத்தியாயங்கள் மற்றும் இரு உப பாகங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.இந்த அறிக்கையை அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியினால் ஆலோசனை வழங்கப்பட் டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கமானி செகரத், ஜனாதிபதியின் பிரதான ஆலோசகர் லலித் வீரதுங்க, ஜனாதிபதி காரியாலயத்தின் பிரதானி அநுர திசாநாயக்க ஆகியோரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

# சீனா ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி அன்பளிப்பு





இலங்கை மாணவர்களுக்கென சீன அரசாங்கத்தால் அன்பளிப்பு செய்யப்பட்ட ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி கொண்ட 44கொள்கலன்கள் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளன. அந்த அரிசி தொகை கல்வி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, நாடு முழுவதுமுள்ள 7,900 பள்ளிகளுக்கு மொத்தம் 10,000 மெட்ரிக் தொன் அரிசியை பரிசாக அளித்து 06 மாத பள்ளி உணவுத் திட்டத்தை வரவேற்பதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்படக்கூடிய மக்கள், குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை முழுவதுமுள்ள 7,900 பள்ளிகளில் 1.1 மில்லியன் குழந்தைகளுக்கு தினசரி சத்தான உணவை வழங்க, இலங்கையின் பள்ளி உணவுத் திட்டத்தை சீனா ஆதரிப்பதாக சீனத் தூதுவர் கியூ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திலும் முறையே மேலும் 02 அரிசி நன்கொடைகள் வரும். இன்னும் பைப்லைனில் இலங்கைப் பள்ளி உணவுத் திட்டத்தை குறைந்தபட்சம் 06 மாதங்களுக்கு நிலைநிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் வழங்குவோம்.

மேலும், சீனத் தூதரகம் கல்வியமைச்சுடன் புதிய கல்வியாண்டில் நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பள்ளிச் சீருடை வழங்குவது குறித்து ஆலோசித்து வருகிறது. நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தின், கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தில் இடம்பெற்ற அரிசி தொகையை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே சீனத் தூதுவர் கியூ சென்ஹொங் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை வந்த வெளிநாட்டுப் பிரஜைகள் மூவருக்கு புகையிரத ஆசனப் பதிவில் மோசடி









(நுவரெலியா நிருபர்)

ஜேர்மன் நாட்டில் இருந்து உல்லாசப் பிரயாணிகளாக இலங்கை வந்துள்ள மூவருக்கு புகையிரத ஆசனப் பதிவில் மோசடி செய்துள்ள சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மொரிஸ் மெலெக் லீசா மாரியா போடன் ஜானா எம்மெல்மன் ஆகிய ஆண் ஒருவரும் இரண்டு பெண்களும் சுற்றுலா பயணிகளாக கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் கொழும்பிலிருந்து பதுளை எல்ல பகுதிக்கு சென்று அங்கு தங்கி அங்குள்ள இடங்களை பார்வையிட்ட பின்பு, கடந்த 27ஆம் திகதியன்று பதுளை, எல்லயில் இருந்து கண்டி செல்வதற்காக முகவர் ஒருவர் ஊடாக புகையிரத டிக்கட்டுகளை பதிவு செய்து கொள்வனவு செய்துள்ளனர்.

குறித்த புகையிரத டிக்கட்டுகளை பதிவு செய்து கொடுத்த தனியார் நிறுவனமானது, ஜேர்மனிய பிரஜைகள் மூவரிடமும் கட்டணமாக 35டொலர் அறவிட்டதாக ஜேர்மனியப் பிரஜைகள் தெரிவிக்கின்றனர். இந்தளவு அதிக தொகையை எவ்வாறு அறவிட்டார்கள் என்பது தொடர்பில் பல கேள்விகள் எழுகின்றன. ஏனெனில், புகையிரத கட்டணமாக இந்தளவு பாரிய தொகை அறவிட முடியாது. அப்படியே அறவிட்டிருந்தாலும் அந்த தனியார் நிறுவனம் அதனை சரியாக செய்திருக்க வேண்டும். அந்த தனியார் நிறுவனம் எல்லயில் இருந்து கண்டிக்கு பதிவு செய்ய வேண்டிய ரயில்வே டிக்கட்டை எல்லயில் இருந்து நானுஓயாவிற்கு மாத்திரமே பதிவு செய்து கொடுத்துள்ளது. அதனை சரியாக பார்க்காத ஜேர்மனியப் பிரஜைகள் மூவரும் தங்களுக்கு கண்டிக்கான டிக்கட் இருப்பதாக நினைத்து குறித்த தினத்தில் (27) காலையில் பதுளையிலிருந்து புறப்படும் 5.55 மணி புகையிரதம் எல்ல, புகையிரத நிலையத்தில் இருந்து முதலாம் வகுப்பில் தங்களுடைய பயணத்தை தொடர்ந்துள்ளனர்.

புகையிரத திணைக்கள டிக்கட் பரிசோதகர்கள் இடையில் இவர்களுடைய டிக்கட்டுகளை பரிசோதனை செய்த பொழுது இவர்களுக்கு நானுஓயா வரை மாத்திரமே டிக்கட் இருப்பதாக அவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இதனை கேள்வியுற்ற ஜேர்மனியப் பிரஜைகள் மூவரும் அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் தங்களுக்கு கண்டி வரை பயணிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறும் தாங்கள் மேலதிக பணத்தை கட்டி புகையிரத நிலையத்தில் செலுத்துவதாகவும் தெரிவித்ததுடன் தங்களுக்கு புகையிரத டிக்கட்டுகளை பதிவு செய்து கொடுத்த நிறுவனம் அவர்களுடைய தொலைபேசிக்கு அனுப்பிய குருந்தகவலையும் டிக்கட் பரிசோதகர்களிடம் காண்பித்துள்ளனர். இந்த விடயத்தை புரிந்து கொண்டு ரயில்வே திணைக்கள அதிகாரிகள் இவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்து அவர்கள், முதலாவது வகுப்பில் இருந்து இரண்டாவது வகுப்பிற்கு அழைத்து வந்து அங்கிருந்து கண்டி வரை பயணம் செய்யுமாறு பணித்துள்ளனர்.

ஜேர்மனியப் பிரஜைகள் மூவரும் வேறு வழியில்லாமல் இரண்டாவது வகுப்பில் ஆசனம் இல்லாமல் நின்று கொண்டே கண்டி வரை பயணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில் விடயத்தை தெரிந்து கொண்ட ஆசனங்களில் இருந்தவர்கள் ஜேர்மனியப் பெண்கள் இருவருக்கும் ஆசனங்களை வழங்கியுள்ளனர்.

ஜேர்மனியப் பிரஜைகளுக்கு ஆசனங்களை ஒதுக்கிய நிறுவனத்தின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் தொடர்பு கொள்ள முயற்சி செய்த போதிலும் அது முடியாமல் போயுள்ளது. இதன்போது மனிதாபிமானத்துடன் நடந்து கொண்ட புகையிரத திணைக்களத்தின் துசார தலைமையிலான குழுவினரை பாராட்ட வேண்டும்.நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள மோசமான சூழ்நிலையில் எமது நாட்டிற்கு உல்லாசப் பிரயாணிகள் வருகை தருவதே பாரிய ஒரு விடயமாகும். அப்படி வருகின்றவர்களையும் இவ்வாறு ஏமாற்றுவது எந்த வகையில் நியாயமானது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே உல்லாசத்துறையை பாதுகாத்து கொள்ள வேண்டியது எங்கள் அனைவருடைய கடமையாகும்.

# யாழ். முதல்வர் - ஜப்பான் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்று (29) யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந்தார். இதன்போது மாநகர முதல்வரால் ஜப்பான் தூதுவருக்கு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்புகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன, ஜப்பான் கடந்த காலங்களில் யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் செய்துவந்த பொருளாதார மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு யாழ். மாநகர முதல்வர் என்ற வகையிலும் மாநகர மக்கள் சார்பிலும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இலங்கையில் சமாதானம் நிலவிய காலத்தில் ஜப்பானால் சமாதான பேச்சுவார்த்தைக்கு காத்திரமான பங்களிப்பு செய்யப்பட்டது. குறிப்பாக இலங்கைக்கான விசேட தூதுவர் யசுசி அகாஷி அந்த பணிகளிலே ஈடுபட்டிருந்தார். அதேபோன்று தற்சமயமும் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஜப்பானிய அரசு பங்களிப்பு செய்ய வேண்டும் என்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு ஜப்பான் உதவி வருகின்ற நிலையில், இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முன்நிபந்தனையாக இலங்கையில் ஒரு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசுக்கு ஜப்பானிய அரசு விடுக்க வேண்டும் என்று மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஜப்பானிய தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

# கட்டுபெத்தவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் இருவர் உயிரிழப்பு







கட்டுபெத்த பிரதேசத்தில் நேற்று (29) இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவை, கட்டுபெத்த சந்தியில் இடம் பெற்ற இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திலேயே இவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 10 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். போதைப்பொருள் வியாபாரிகளுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு காரணமாக அரச பஸ்கள் முடங்கும் அபாயம்

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்களுக்குத் தேவையான டயர்கள் மற்றும் பற்றரிகள் உள்ளிட்ட உதிரிப் பாகங்களின் தட்டுப்பாடு காரணமாக பொதுப் போக்குவரத்து சேவை தடைப்படும் அபாயம் உள்ளதாக அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் எச்சரித்துள்ளது.

1977ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபையில் 7,200 பணியாளர்கள் இருந்ததாகவும், நாளாந்தம் 9,500 பஸ்கள் இயங்கி வந்ததாகவும், இன்று 5,500 பஸ்களும், 28,000 ஊழியர்களும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போதைய நெருக்கடி நிலை தொடருமானால், இலங்கை போக்குவரத்து சபை பாரிய ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடும் என சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ்களுக்கான உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தால், ஏறக்குறைய 1,000 பஸ்கள் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவரான சேபால லியனகே தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்தை இயக்குவதற்குத் தேவையான உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை மோசமான பொருளாதார நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, பொருளாதார மந்த நிலையின்போது பொதுப் போக்குவரத்து பாதுகாப்பானதாக இருக்கும் வகையில் எரிபொருள் நெருக்கடிக்கு அரசாங்கம் தீர்வுகளை வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சில பிரதேசங்களுக்கு 24 மணிநேர நீர்வெட்டு

(பேருவளை நிருபர்)

காலி, வக்வெல்ல நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இன்று (29ஆம் திகதி) காலை 9 மணி முதல் நாளை 30ஆம் திகதி காலை 9 மணி வரையிலான 24 மணித்தியால நீர் விநியோகத்தடை காலி மாநகரசபை பகுதி, ரத்கம மற்றும் தொடந்துவ பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

நீர் விநியோகத் தடையினால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியம் குறித்து கவலை தெரிவிக்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, முன்கூட்டியே நீரை சேமித்து சிக்கனமாக பாவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றது. மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருளுக்காக காத்திருந்தவர் ரிப்பர் லொறி மோதி உயிரிழப்பு

## தர்காநகரில் சம்பவம்

(பீ.எம். முக்தார்)



தர்காநகர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகே எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்த நபர் ஒருவர் வீதியைக் கடக்கும்போது ரிப்பர் வண்டியில் மோதி பலியான பரிதாப சம்பவம் நேற்றுமுன்தினம் 28ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

தர்காநகர் புவக்வத்தை, அலவத்துகொட பகுதியைச் சேர்ந்த சிங்ஹபுலிகே ஆனந்த (வயது 58) என்ற நபரே இவ்வாறு மரணித்தவராவார்.

வேறொரு நபரின் லொறி ஒன்றுக்கு டீசல் பெற்றுக்கொள்வதற்காக கியூ வரிசையில் காத்துநின்ற இவர், இரவு 11.20 மணியளவில் வீதியைக் கடக்க முற்பட்டபோது டிப்பர் வண்டியில் மோதியுள்ளார்.

அதே எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக் கொள்ள காத்திருந்த டிப்பர் சாரதி அளுத்கம பகுதிக்கு இரவு உணவுக்காக சென்று மீண்டும் அதே இடத்தை நோக்கி வரும்போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக டிப்பர் சாரதியை அளுத்கம பொலிஸார் கைதுசெய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விபத்தில் மரணித்தவரின் சடலம் அளுத்கம வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

# பதிவாளர் நாயக திணைக்களம் வாரத்தில் இரு தினங்கள் இயங்கும்

பதிவாளர் நாயக திணைக்களம் எதிர்வரும் 10 தினங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களை திங்கள் மற்றும் புதன்கிழமை ஆகிய இருதினங்கள் மாத்திரம் விநியோகிக்கும்.

இதுதொடர்பாக பதிவாளர் நாயக திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், எதிர்வரும் 10 தினங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களை திங்கள் மற்றும் புதன்கிழமை ஆகிய இருதினங்கள் மாத்திரம் விநியோகிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இந்த இரண்டு தினங்களில் மாத்திரம் காலை 8.30 இலிருந்து மாலை 4.00மணி வரை இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். சகல காணி பதிவாளர் சேவைகளும் அந்த இரண்டு தினங்களுக்கு மாத்திரம் செயற்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பத்தரமுல்லை, ஹிசுருபாயவிலுள்ள கிளை, குருணாகல், கண்டி, மாத்தறை குடிவரவு - குடியகல்வு திணைக்கள கிளை அமைந்துள்ள பிரதேச செயலக அலுவலகங்களில், மாவட்ட பதிவாளர் பிரிவு வாரத்தின் 5 நாட்களும் இயங்குமெனவும், அவற்றில் வழமை போன்று குறித்த சேவைகளை பெற முடியுமெனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தமிழன் THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூன் 30ஆம் திகதி, வியாழக்கிழமை

# முற்போக்குக் கூட்டணியின் முற்போக்கான நடவடிக்கை!

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் மற்றும் நிர்வாக செயலாளர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் நேற்று முன்தினம் காலை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்ததோடு, மாலை வேளையில் இந்திய உயர்ஸ்தானிகரையும் சந்தித்தனர்.

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் தற்போது பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும், அவர்களுக்கு முதற்கட்ட நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும், அதற்கு பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் நாள்தோறும் காலையில் வேலைக்கு செல்வதால் அவர்களுடைய இரண்டு வேளை உணவிற்கு கோதுமை மா அதிகம் பயன்படுத்துவதால் முன்னுரிமை அடிப்படையில் நிவாரணமாக கோதுமை மாவை வழங்க கோரிக்கை முன்வைத்துள்ளதாக கூறினார்.

நாட்டில் 69 ரூபாவிற்கு இருந்த ஒரு கிலோ கோதுமை மா, தற்போது 300 ரூபா வரை உயர்ந்துள்ளதால் பெருந்தோட்ட மக்களின் உணவு தேவையை பூர்த்தி செய்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகையால் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பெருந்தோட்ட மக்களுக்கும் நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மேலும், இந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் மிக மோசமாக இருப்பதாகவும், இந்த மோசமான நிலைக்கு ஜனாதிபதி முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டும் எனவும், அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்த மதகுருமார், தொழிற்சங்கங்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் என பல்வேறு தரப்பினர் உள்ளடங்கிய 69 இலட்சம் மக்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் பழனி திகாம்பரம் கூறியுள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் மலையக பெருந்தோட்ட மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் நலன்கருதி தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொண்டுள்ள முயற்சிகள் வரவேற்கத்தக்கவை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டபோதிலும், அது அவர்களுக்கு முறையாக கிடைப்பதில்லை. தொழிலாளர்கள் பலர் நிகர சம்பளமாக சுமார் 15 ஆயிரம் ரூபா வரையிலேயே பெற்றுக்கொள்கின்றனர்.

பொருட்களின் விலைகள் அனைத்துமே பல மடங்குகளாக அதிகரித்துள்ளன. எரிபொருள், எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பொருளாதாரச் சுமைக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

கோதுமை மா அவர்களது பிரதான உணவுவகைகளில் ஒன்றாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் அறிவித்தது. அதன் முதற்கட்டமாக மடகும்புரையில் விழா ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதுவே முதலும், கடைசியுமாக அமைந்தது.

அதன் பின்னர் கோதுமை மாவை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மலையக அரசியல்வாதிகளும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

ஆயினும், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தொழிலாளர்களுக்கு கோதுமை மாவை பெற்றுக்கொடுக்க பிரயத்தனம் கொண்டுள்ளது. இந்த முயற்சி வெற்றிபெற வேண்டும் என்பதே எமது எண்ணமாகும். இதேபோல் பல விடயங்களில் மலையகத் தொழிலாளர் சமூகம் புறக்கணிக்கப்படுவதை கவனித்து அவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இவையெல்லாம் வெறும் கலந்துரையாடல்களுடன் மாத்திரம் நின்றுவிடக்கூடாது என்பதில் முற்போக்குக் கூட்டணி உறுதியாக இருக்க வேண்டும். இந்திய வம்சாவளியினருக்கான உதவி என்பதால் இந்தியா முழுமையான அக்கறையுடன் நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கும் என நம்புகிறோம்.



# ஆன்மிகம் தழைக்கட்டும்!...

அமெரிக்காவும், சோவியத் நாடும் சேர்ந்து கூட, ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திவரும் அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை. அணு ஆயுதத்தாலும், ஏவுகணைகளாலும், சமாதான உடன்படிக்கைகளாலும், சட்டங்களினாலும் நாட்டுக்கு நாடு நிகழ்ந்து வரும் போர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பின்னர் எப்படித்தான் உலக அமைதியை ஏற்படுத்துவது? அது ஆன்மிகத்தால்தான் முடியும்.

இரண்டாவது உலகப்போரில் வென்ற வின்ஸ்டன் சர்ச்சிலை, "உலகத்தைக் காப்பாற்றியவர்" (சேவியர் ஒவ் த வேர்ல்ட்) என அனைவரும் பாராட்டினர். அந்த சர்ச்சிலைப் பார்த்து, "ஏன் உங்களால் காந்தியடிகளை வெல்ல முடியவில்லை?" என நிருபர்கள் கேட்டனர். அதற்கு சர்ச்சில், "காந்தியடிகள் கம்பை எடுத்திருந்தால், நான் கத்தியை எடுத்திருப்பேன்; மகாத்மா கத்தியை எடுத்திருந்தால், நான் போர்வாளைத் தூக்கியிருப்பேன்; காந்தியடிகள் போர்வாளைத் தூக்கியிருந்தால், நான் துப்பாக்கியை எடுத்திருப்பேன். ஆனால், மகாத்மா சத்தியாக்கிரகத்தை அல்லவா ஆயுதமாக ஏந்தினார்? அதனால்தான் அவரை என்னால் வெல்ல முடியவில்லை" என்றார்.

காந்தியடிகளுடைய வாழ்க்கை சரித்திரத்தை எழுதியவர் "காந்தியடிகள் அரசியல்வாதிகளுக்குள்ளே ஒரு ஞானி; ஞானியர்களுக்குள்ளே ஓர் அரசியல்வாதி" என எழுதியதன் பொருத்தத்தை இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும். காந்தியடிகளை 'அரை நிர்வாணப் பக்கிரி' என வர்ணித்த சர்ச்சில், மகாத்மாவின் மரணத்தை அறிந்தபோது, "ஐம்பதாண்டுகள் நாங்கள் போற்றிப் பாதுகாத்த ஓர் உயிரை சுதந்திரம் பெற்ற ஓராண்டுக்குள்ளே கொன்றுவிட்டீர்களே.." என வருந்தினார். எந்த உயிரையும் கொல்வதற்கு ஆன்மிகம் உடன்படாது.

உலகில் பயங்கரவாதிகளின் கோரக் கொலைகளைச் சட்டத்தாலும் திருத்த முடியவில்லை; இராணுவத்தாலும் தடுக்க முடியவில்லை. பின் எதனால் அவர்களைத் திருத்தலாம் என்றால் ஆன்மிக உணர்வால் திருத்தலாம்.

ஆன்மிகம் என்பது சமயம், மதம் ஆகிய எல்லாவற்றையும் கடந்து நிற்பதாகும். "மறையாதி நூலையும் வகுத்து, சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேல் சமயம் கடந்த மோன சமரசமும் வகுத்தவன்" எனும் தாயுமானவர் பாடலில் இடம்பெறும் 'மோன சமரசம்' என்பதுதான் ஆன்மிகம்.

தாயுமானவர் நாளும் சிவபூஜை செய்பவர். ஒருநாள் பூ கொய்கின்ற பண்டாரம் வராதபொழுது, அவரே பூ கொய்யப் புறப்படுகின்றார். ஆனால், ஒவ்வொரு பூவிலும் இறைவனுடைய முகம் தெரிந்ததால், பூக்களைக் கொய்யாமலேயே திரும்பி வந்துவிட்டார். அன்றைக்கு பூஜை செய்யாமல் போனார். அதனை "பண்ணேன் உனக்காக பூஜை பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி; அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்" எனும் பாடல் மூலம் தெரிவிக்கின்றார்.

இராமாயணத்தில் இராவணவதம் முடிந்தவுடன், அச்செய்தியை அசோகவனத்தில் இருக்கும் சீதாபிராட்டிக்குத் தெரிவிக்க அனுமன் விரைகின்றான். அங்கு சீதையைச் சூழ்ந்து இருக்கும் அரக்கியர்களைப் பார்க்கிறான். அரக்கியர்கள் சீதைக்கு இழைத்த கொடுமைகள் எல்லாம் அனுமனுக்கு நினைவு வந்து, "பிராட்டியே! உனக்குத் தீங்கிழைத்த இவ்வரக்கியர்களைக் கொல்வதற்கு எனக்கு ஒரு வரம் கொடு" என்கிறான். இங்குதான் பிராட்டியினுடைய பெருங்கருணையைப் பார்க்க வேண்டும். "அனுமனே! எனக்கு இவர்கள் இழைத்த தீமை எல்லாம், என்னுடைய வினைப்பயன்களே தவிர, இவர்கள் செய்ததாக நினைக்காதே! இவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன் என்று எனக்கு நீ ஒரு வரம் கொடு" எனப் பிராட்டி வேண்டுகின்றாள். இதுதான் ஆன்மிகத்தின் உச்சம் ஆகும்.

ஆன்மிக உணர்வுக்கு மற்றுமொரு நிகழ்ச்சியை சுட்டிக் காட்டலாம். அமெரிக்காவில் வாழ்ந்த இங்கர்சால் நாத்திகர். ஆனால், பேச்சில் மன்னாதி மன்னன். அமெரிக்க அதிபரின் சம்பளத்தைக் காட்டிலும், அதிகமாக சம்பாதித்தவர் இங்கர்சால் தம் மேடைப் பேச்சின் மூலம். மேலும், இங்கர்சால் பேச்சில் அப்பொழுதிருந்த போப்பாண்டவருக்கு மயக்கமே உண்டு. போப்பாண்டவர் மரணப்படுக்கையில் இருக்கும்போது, பல நாட்டுக் கர்தினால்கள் காத்துக் கிடந்தனர், அவருடைய அழைப்பிற்காக! ஆனால், போப்பாண்டவர் இங்கர்சாலை மட்டும் அழைத்து வரச்சொன்னார்.

அவர்முன்வந்த இங்கர்சாலை நோக்கி போப்பாண்டவர், "இங்கர்சால், நான் வாழ்க்கை முழுதும் ஆண்டவரைப் பற்றிப் பேசினேன்; சிந்தித்தேன். அதனால் நான் சொர்க்கத்திற்குப் போவேன். நீயோ வாழ்க்கை முழுமையும் நாத்திகம் பேசி வருகிறாய். அதனால் நீ நரகத்திற்குத்தான் போவாய். ஆனால், நான் சொர்க்கத்தில் இருந்தாலும், உன் பேச்சைக் கேட்காவிட்டால், அது சொர்க்கமாக இருக்காது. அதனால் இனிமேலாவது கடவுளைப் பற்றிப்பேசு" எனச் சொல்லித் தம் கடைசி மூச்சையும் நிறுத்திக் கொண்டார். இதைப்பற்றி எழுத வந்த வரலாற்றாசிரியர்கள், "போப்பாண்டவர் வெற்றி பெற்றார்; ஆனால், இங்கர்சால் தோற்கவில்லை. இங்கர்சால் வெற்றி பெற்றார்; எனினும், போப்பாண்டவர் தோற்கவில்லை" என எழுதினர். இதுவும் ஆன்மிகம் அல்லவா?

ஆன்மிகத்தின் ஆற்றலுக்கு கப்பலோட்டிய தமிழர் வ.உ.சியின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை சொல்லலாம். வ.உ.சி.யினுடைய "சந்நத்" உரிமையையும் ஆங்கிலேய அரசு பறித்துக்கொண்டதால், அவர் வழக்குரைஞர் தொழிலை நடத்த முடியாமல், எண்ணெய்க்கடை வைத்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். வாரிவாரி வழங்கியதால், கடனாளியாகி, வறுமையில் வாடிக் கொண்டிருந்ததை ஆங்கிலேய நீதிபதி வாலேஸ் அறிந்து, மனம் நொந்து போனார். வ.உ.சியின் துன்பத்தைத் துடைக்க எண்ணிய நீதிபதி வாலேஸ், தமது குமாஸ்தாவை அழைத்து வ.உ.சியைத் தம்மிடம் அழைத்து வரச்சொன்னார்.

வ.உ.சியினுடைய வீடு, கடைகளைச் சுற்றி உளவுத்துறையினர் வேவு பார்த்துக் கொண்டிருந்ததால், தயங்கிய குமாஸ்தா, கடைசியில் நீதிபதியினுடைய ஆணைக்கு இணங்கி வ.உ.சியின் இருப்பிடத்திற்குச் சென்றார்.

நீதிபதியின் இளகிய மனத்தை வ.உ.சியிடம் எடுத்துச் சொல்லுகிறார் குமாஸ்தா. அதற்கு வ.உ.சி. "நான் அரசாங்கத்திற்கு விரோதமானவன். நீதிபதி என்னை சந்தித்தார் எனும் செய்தி அரசுக்குத் தெரிந்தால், அவருடைய வேலை போய்விடும்" எனச் சொல்லி வர மறுத்தார். ஆயினும், அந்த குமாஸ்தா நீதிபதியினுடைய இளகிய மனதையும், அவர் கழிவிரக்கப்பட்டதையும் எடுத்துச் சொன்னார். உடனே வ.உ.சியும் நீதிபதியின் இருப்பிடத்திற்குச் சென்றார்.

நீதிபதி வாலேஸ், வ.உ.சியிடம், அவருக்கு வழக்குரைஞர் தொழிலை நடத்துவதற்குரிய "சந்நத்" எனும் சின்னத்தைப் பெற்றுத் தருவதாக வாக்களித்தார். அதனை ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் நின்றார் வ.உ.சி. அதனை கவனித்த நீதிபதி, மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என முடிவெடுத்து அவருக்குச் "சந்நத்" சின்னத்தைப் பெற்றுத் தந்தார்.

"சந்நத்" சின்னம் பெற்ற வ.உ.சி.யின் வழக்குரைஞர் தொழில், முன்புபோல் கொடிகட்டிப் பறந்தது. வழக்குரைஞர் தொழிலில் பெற்ற ஊதியத்தைக் கொண்டு ஏழைகளுக்கு வாரி வழங்கினார்.

ஆங்கிலேயர்கள் ஐந்து விரல்களால் அடித்தபொழுது வடிந்த கண்ணீரை, வாலேஸ் என்ற ஒற்றை விரல் துடைத்ததை நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்த வ.உ.சி. நன்றி என்ற ஒற்றைச் சொல்லால், தமது உள்ளத்தைத் திறந்து காட்ட விரும்பாமல், நிலைத்து நிற்கும் வகையில், நன்றி சொல்ல விரும்பினார். வ.உ.சிக்கு இரண்டு மகன்கள் உண்டு. நீதிபதி வாலேஸுக்கு நிலைத்த நன்றியைச் சொல்ல, ஒரு மகனுக்கு "வாலேஸ்வரன் என பெயர் சூட்டினார். இதுவும் ஆன்மிக உணர்வே.

சட்டத்தாலும், சலுகைகளாலும், இராணுவத்தாலும் சாதிக்க முடியாததை ஆன்மிக உணர்வு சாதிக்கும் என்பதால், அது தழைத்து வளரட்டும்.

**தி.இராசகோபாலன் - பேராசிரியர்**
*நன்றி - தினமணி*

## நக்கல் நமசிவாயம்

**பார்லிமென்ட் வெப்சைட்டில் இருந்து எம்.பிமாரின் விலாசங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக நீக்கியிருக்கிறாங்களாம்..! இனி எம்.பிமார் வீடுகளை தேடிப்பிடிச்சு செய்யுறதை செய்யுங்கோ எண்டு சொல்லுறாங்களோ..?!**



## இன்றைய நாளில்...

- 1882 – அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட்டை சுட்டுக் கொன்ற "சார்ல்ஸ் கைட்டோ" தூக்கிலிடப்பட்டான்.
- 1905 – சிறப்புச் சார்புக் கோட்பாட்டை அறிமுகப்படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது.
- 1910 – இலங்கையில் ஐந்து சத செப்பு நாணயம் பயன்பாட்டில் இருந்து விலக்கப்பட்டது.
- 1937 – உலகின் முதலாவது அவசரத் தொலைபேசி எண் (999) லண்டனில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1971 – சோவியத்தின் சோயுஸ்-11 விண்கலத்தில் ஏற்பட்ட காற்றுக் கசிவினால் விண்வெளி வீரர்கள் மூவர் உயிரிழந்தனர்.
- 1972 – ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்தில் ஒரு லீப் வினாடி அதிகரிக்கப்பட்டது.
- 1997 – முதலாவது ஹரி பொட்டர் நூல் வெளியிடப்பட்டது.
- 2002 – பிரேசில் தனது ஐந்தாவது உதைபந்தாட்ட உலகக்கிண்ணத்தை வென்றது.

# மலையக மக்களுக்கு நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும்

## பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழ் முற்போக்கு கூட்டணியினர் கோரிக்கை



மலையக மக்கள் இன்று பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு முதற்கட்ட நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் - என தமிழ் முற்போக்கு கூட்டணியினர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

அதற்கு பிரதமர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மேலும், இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மிக மோசமாக இருக்கின்றன. இந்த மோசமான நிலைக்கு ஜனாதிபதியே முற்றுமுழுதாக பொறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன் மற்றும் நிர்வாக செயலாளர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் நேற்றுமுன்தினம்(28) காலை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்ததோடு மாலை இந்திய உயர்ஸ்தானிகரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பிரதித் தலைவர் பழனி திகாம்பரம்,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாள்தோறும் வேலைக்கு செல்வதால் அவர்களுடைய இரண்டுவேளை உணவிற்கு கோதுமை மாவையே அதிகம் பயன்படுத்துகின்றனர். எனவே, முன்னுரிமை அடிப்படையில் நிவாரணமாக கோதுமை மாவை வழங்கக் கோரிக்கை முன்வைத்துள்ளோம். 69 ரூபாவிற்கு இருந்த கோதுமை மா ஒரு கிலோவின் விலை இன்று 300 ரூபா வரை உயர்ந்துள்ளதால் பெருந்தோட்ட மக்களின் உணவுத் தேவையை பூர்த்திசெய்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

ஆகையால் 2,50,000 பெருந்தோட்ட மக்களுக்கும் நிவாரணமாக கோதுமை மா வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவந்த மதகுருமார்கள், தொழிற்சங்கங்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள் என பல்வேறு தரப்பினர் உள்ளடங்கிய 69 இலட்சம் மக்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், நாடு இக்கட்டான நிலையில் இருந்தபோது அதனைப் பொறுப்பேற்க எவரும் முன்வராதபோது ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை பொறுப்பேற்க முன்வந்தார். ஆனால், உடனடியாக நாட்டை சீரான நிலைக்குக் கொண்டுவர முடியாதுள்ளது.

அதற்கு அவருக்கு காலம் வழங்கப்பட வேண்டும். ஆனால், இந்த ஜனாதிபதி இருக்கும் வரை அது சாத்தியப்படுமா என்ற சந்தேகமே உருவாகியுள்ளது.

தற்போதைய நிலையில் சஜித் பிரேமதாச அல்லது அநுரகுமார திசாநாயக்க அல்லது முழு நாடாளுமன்றமும் நாட்டை பொறுப்பேற்றாலும் உடனடியாக இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. நாடு முற்றுமுழுதாக வீழ்ச்சியை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இதற்கு ராஜபக்ஷக்கள் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அரசின் மறு அறிவித்தல் வரும்வரை டீசல் மற்றும் பெற்றோலை பெற்றுக்கொள்ள மக்கள் எரிவாயு நிலையங்களுக்கு செல்ல வேண்டாமென அரசு அறிவித்துள்ளபோதிலும் மாத்தளையில் டீசல் மற்றும் பெற்றோலை பெற்றுக்கொள்ள பிரதான வீதிகளில் வாகனங்களுடன் சாரதிகள் காத்திருப்பதை காணலாம். (மாத்தளை நிருபர்)

# மீன் வளர்க்க அமைக்கப்பட்ட குளத்தில் வீழ்ந்து 3 வயது குழந்தை உயிரிழப்பு

பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலா பொக்க மேற்பிரிவில் 03 வயது ஆண் குழந்தையொன்று குளத்தில் விழுந்து உயிரிழந்துள்ளது.

தனது வீட்டுக்கு முன்பாக மீன்கள் வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குளத்தில் வீழ்ந்தே நேற்று முன்தினம்(28) மாலை இந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது.

குறித்த ஆண் குழந்தை வீட்டுமுற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோதே, குளத்தில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாகவும் சடலம் மடுல்கலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மடுல்கலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இரு கோடுகளை தவறாக பயன்படுத்தியதன் பலனையே இன்று நாம் அனுபவிக்கிறோம்

## நுவரெலியா மாவட்ட எம்.பி. இராதாகிருஸ்ணன்



(நுவரெலியா நிருபர்)

69 இலட்சம் மக்கள் இரண்டு கோடுகளை தவறாக பயன்படுத்தியதால் இலங்கையின் அனைத்து மக்களும் இன்றைய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். எனவே, கோடுகள்தானே என்று இனிமேலும் அலட்சியமாக செயற்படக் கூடாது - என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் நட்டமீட்டுகின்ற அனைத்து துறைகளையும் சரியான திட்டமிடலுடன் தனியாருக்கு வழங்கி இலாபமீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று அபிவிருத்தியடைந்துள்ள அனைத்து நாடுகளிலும் இந்த நிலைமையே காணப்படுகின்றது. அனைத்தையும் அரசாங்கமே செய்ய முடியாது. நிர்வகிக்கவும் முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய நிலைமை தொடர்பாக நேற்று (29) கருத்து தெரிவித்த அவர்,

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு விடயத்திலும் அலட்சியமாக செயற்படவோ பார்க்கவோ கூடாது. அப்படி செயற்பட்டதால்தான் இன்றைய நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. வாக்களித்தவர்கள் மாத்திரம் அல்ல அனைவருமே இன்றைய நிலைமைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்த அரசாங்கத்திடம் எந்தவிதமான திட்டமிடலும் இல்லை. டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் கடைசி கட்டத்தை அடையும். அதனை கொண்டு வருவதற்கு எந்தவிதமான திட்டத்தையும் முயற்சி செய்யாமல் இன்று கட்டாருக்கும் ரஷ்யாவுக்கும் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்தும் இந்த அரசாங்கம் வெளிநாடுகளில் கடன் பெறுவதை மாத்திரமே இலக்காகக்கொண்டே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாட்டிற்குள் டொலரை கொண்டு வருவதற்கு எந்தவிதமான திட்டமும் இவர்களிடம் இல்லை.

எவ்வளவு காலத்திற்கு கடன் வாங்கி நாட்டை கொண்டுசெல்ல முடியும். எனவே, நாட்டிற்குள் எங்களுடைய வளங்களை பயன்படுத்தி டொலர் கொண்டுவருவதற்கான திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அதனை விடுத்து தொடர்ந்தும் ஏனைய நாடுகளில் கையேந்திக்கொண்டு இந்த நாட்டை எவ்வளவு காலத்திற்கு முன்கொண்டு செல்ல முடியும். ?

இன்று ஜனாதிபதியாகவோ பிரதமராகவோ அமைச்சர்களாகவோ இருக்கின்ற எவருக்கும் எந்தவிதமான திட்டமிடலும் இல்லை. இவர்கள் காலைமுதல் மாலைவரை எந்த நாட்டில் கடன் வாங்க முடியும் என்பதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய நாட்டில் என்ன வளம் இல்லை. இயற்கை எழில், நாட்டை சூழவும் கடல், சிறப்பான மண்வளம் இப்படி அனைத்தையும் வைத்துக்கொண்டு ஏன் ஏனைய நாடுகளில் தொடர்ந்தும் நாம் கையேந்த வேண்டிய நிலை. இதனை மாற்றியமைக்க வேண்டுமாக இருந்தால் இப்போதாவது அரசாங்கம் இதற்காக ஒரு குழுவை அமைத்து அதற்கான திட்டமிடலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஏனைய நாடுகளிடம் கையேந்துகின்ற நிலையை மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



2021ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் உக்குவளை அல்மினா ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றியவர்களில் பாத்திமா (169), ஹசானா (166), ஆயிஷா (164), சுஹ்ரி (161), அர்ஹம் (160), அப்துல்லாஹ் (157), ருஸ்தி (154), அமல் (153), அப்தால் (153), சாஜித் (151) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்தவர்களுடன் பாடசாலை அதிபர் நிரோசியா, உதவி அதிபர் சாதிகீன் மற்றும் கற்பித்த ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (உக்குவளை நிருபர்)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 29.06.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 133 814 | 144 7 82 |
| கனேடியன் டொலர் | 163 5256 | 176 4045 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1325 | 44 23 0 |
| யூரோ | 262 0101 | 276 87 3 |
| ஜப்பான் யென் | 1 4872 | 1 60 |
| சிங்கப்பூர் டொலர் | 144 1078 | 154 6632 |
| ஸ்ரேலிங் பவுன் | 321 4584 | 338 5226 |
| சுவிஸ் பிரான்ங் | 26 462 | 276 2 2 |
| ஐ.அ.டொலர் | 244 7062 | 256 6 2 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 843 0154 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 17 0 |
| ஓமான் | ஓமான் றியால் | 823 2144 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 3304 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 7350 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86 8225 |

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com



ஐக்கிய அமெரிக்காவில் இயங்கும் நண்பர்கள் வட்டத்தின் முத்தமிழ் முன்னேற்றக் கழகம் அமைப்பினூடாக எதிர்வரும் 02 ஆண்டுகளுக்கு மிகவும் தொலைவிலிருந்து பயணிக்கும் 15 மாணவர்களுக்கு போக்குவரத்து செலவை புலமைப்பரிசிலாக பெற்றுக்கொடுக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (28) நிகழ்நிலையில் நடைபெற்றது. இதன்போது பயனாளி மாணவர்களையும் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (செ.தி.பெருமாள்)

# பலாங்கொடையில் குரங்குகள் தொல்லை உணவுப் பயிர்களை அழிப்பதாக புகார்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை தேர்தல் தொகுதிக்குட்பட்ட பல விவசாய பிரதேசங்களில் குரங்குகள் தொல்லை கொடுத்து வருவதாக பிரதேசவாசிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இம்புல்பே, அலுத்நுவர, பெலிஹூல்ஓய, பம்பஹின்ன, தென்னதியவின்ன, வேலிஓய, கல்தோட்டை உட்பட பல பிரதேசங்களிலுள்ள விவசாய மரக்கறி, பழவகை, சேனைப்பயிர்ச் செய்கைகள் மற்றும் வாழை, ஏனைய பயிர் நிலங்களை நாடி இவை வருகை தருவதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

உணவுக்காக இவை வருகை தருவதால் பயிர்களை நாசம் செய்வது மட்டுமன்றி இவற்றின் செயற்பாடுகள் மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளையும் பாதிப்படையச் செய்வதுடன் இவை வீடுகளை ஆக்கிரமித்து உணவுப் பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணங்களுக்கும் சேதத்தை விளைவிப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



எரிபொருள், சமையல் எரிவாயு, குழந்தைகளுக்கான பால் மா மற்றும் உணவுப் பொருட்கள் விலை உயர்வை கண்டித்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக பதவி விலகக் கோரியும் நுவரெலியா, உடபுசல்லாவ ஆவேலியா சந்தியில் கிராம பொதுமக்களும் இளைஞர், யுவதிகளும் பதாகைகளை ஏந்தியவாறு நேற்றுமுன்தினம் (28) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (தலவாக்கலை நிருபர்)

# பெற்றோல் வழங்கக் கோரி யாழ். மாவட்ட செயலகம் முன்னால் போராட்டம்

(யாழ். நிருபர்)

தமக்கு பெற்றோலை வழங்கக் கோரி யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சிலர் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டோக்கன் பெற்றவர்களுக்கு பெற்றோல் வழங்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டமையால் நேற்று புதன்கிழமை அதிகாலை தொடக்கம் பலர் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.





இந்நிலையில், காலை 09 மணியளவில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படுமென அறிவித்தமையால் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தவர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது. அதனையடுத்து வரிசையில் காத்திருந்த பலரும் மாவட்ட செயலகம் முன் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வந்திருந்த பொலிஸாரிடம், ஐ.ஓ.சி. பெற்றோல் நிரப்பு நிலையத்தில் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் பொதுமக்களுக்கான பெற்றோல் வழங்கப்படுமென ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தமையை அடுத்தே நாம் பெற்றோலை பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தோம் எனக் கூறி பத்திரிகை செய்திகளை பொலிஸாரிடம் காட்டினார்கள். அதேவேளை, போராட்டம் நடத்தியவர்களுடன் மேலதிக மாவட்ட செயலர் ம.பிரதீபன் பேச்சு நடத்தியபோது, அத்தியாவசிய சேவையாளர்களுக்குதான் எரிபொருள் விநியோகிக்க சொல்லி எமக்கு அறிவுறுத்தப்பட்டமைக்கு அமையவே நாம் எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்கு அவ்வாறு அறிவுறுத்தினோம் - என தெரிவித்தார்.

# ஜப்பான் தூதுவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழில் சந்திப்பு



(யாழ். நிருபர்)

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொக்குவிலிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் சந்தித்தார்.

நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்புகளுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைநகரில் கடற்படையினருக்கான காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்






(யாழ். நிருபர்)

காரைநகரில் கடற்படை முகாம் அமைப்பதற்காக பொதுமக்களின் காணியை சுவீகரிக்கும் முயற்சி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

காரைநகர் J/145 கிராமசேவையாளர் பிரிவில் நீலன்காடு பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியை கடற்படை முகாம் அமைக்கவென அளவீடு செய்யும் முயற்சி நேற்று முன்தினம் (28) முன்னெடுக்கப்படவிருந்தது.

அதனையடுத்து அங்கு கூடிய மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரின் எதிர்ப்பினால் காணி அளவீட்டுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# குருந்தூர்மலையில் புத்தரின் சிலை நிறுவ முற்பட்டதை தடுக்கப் போராடியவருக்கு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தல்

(யாழ். நிருபர்)



குருந்தூர்மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில், அதனை தடுக்கப் போராடியவருக்கு துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 13ஆம் திகதி குருந்தூர்மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில், அந்த செயற்பாடு போராட்டம் மூலம் தடுக்கப்பட்டது.

இந்நிலையில் 15ஆம் திகதி அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவரை அச்சுறுத்தும் வகையில் இனந்தெரியாத நபர்கள் செயல்பட்டனர். குறித்த நபர் தனது வழமையான பணிகளை ஆற்றிவிட்டு வீட்டுக்குள் செல்லும்போது இரண்டு இனந்தெரியாத நபர்கள் மூலம் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்பட்டார்.

அவர்கள் இரண்டு பேரும் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குள் சென்றனர். இந்தப் பிரச்சினைக்கு பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர் இடம்பெயர்ந்து வேறுபகுதியில் வசிக்கின்றார்.

இதுபற்றி பொலிஸாருக்கு அவர் முறைப்பாட்டை செய்திருந்ததுடன், எங்களுடன் நேரடியாக தொடர்புகொண்டு இந்த விடயங்களை பதிவு செய்திருந்தார். அத்துடன், யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முற்பட்டபோது முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்ற வகையில் வவுனியாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவுசெய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

உள்பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த அமைச்சர் சரத் வீரசேகர, எமது கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரனின் பெயரை பதிவு செய்ததுடன், ஏனைய தமிழ்த் தரப்புகளையும் பொதுமக்களையும் தமிழ் அடையாளங்களை பாதுகாக்க - இடங்களை பாதுகாக்க முற்படுகின்றவர்களையும் மிக மோசமான முறையில் நாடாளுமன்றத்தில் அச்சுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. ஜெனீவாவுக்கு ஜூலை மாதம் சென்று பல கதைகளைக் கூறவிருக்கும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்போதைய நாட்டின் சூழலிலும் தமிழ்த் தேசத்தை அழிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் முனைப்பாக செயற்படுகின்றது - என்றார்.

# மடத்தடியில் மதுபோதையில் ரகளை புரிந்தவர் மீது வெட்டு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடத்தடிப் பகுதியில் நேற்று முன்தினம் (28) இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மதுபோதையில் வந்த இளைஞன் தனது வீட்டில் இருந்த பொருட்களை உடைத்து ரகளை புரிந்த வேளையில் அவ்விடத்திற்கு வந்த மற்றொரு இளைஞன் அவர் மீது வாள் வீச்சு மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த 31 வயதான இளைஞன் ஒருவரே கையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரிஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

திகதி 28.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4800
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,988,980.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 9 6 4 0 6 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,307,713.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1278
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,384,440.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 7 2 2 5 7 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,089,290.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3042
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,738,700.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 38 52 76 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,188,286.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 830
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,952,580.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 24 46 68 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 116,512,922.40

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 109
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,115,500.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 27 31 35 38
விசேட இலக்கினம் கும்பம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,717,115.20

கோடி 25 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1148
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,816,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 258,923,662.00
Q 22 22 39 58 61
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கிளிநொச்சியில் பஸ் இன்றி காத்திருக்கும் ஆசிரியர்கள்





(கிளிநொச்சி நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து இரண்டு பஸ்களை பிடித்து கிளிநொச்சிக்கு வருகைதந்தும் கிளிநொச்சியிலிருந்து தங்களது கிராம பாடசாலைகளுக்கு செல்வதற்கு பஸ்கள் இன்றி நீண்டநேரம் டிப்போ சந்தியில் காத்திருக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதென பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து வீட்டுப் பணிகளை முடித்துவிட்டு அங்கிருந்து பிரதான வீதிக்கோ அல்லது யாழ். நகருக்கோ ஒரு பஸ்ஸில் பயணம் செய்து அங்கிருந்து கிளிநொச்சிக்கு பிறிதொரு பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டு வருகைதந்தபோதும் கிளிநொச்சியின் கிராமங்களிலுள்ள எங்களது பாடசாலைகளுக்கு உரிய நேரத்திற்குச் செல்வதற்கு பஸ்கள் இன்மையால் காலை ஒன்பது மணிவரை வீதியில் காத்திருக்கின்றோம்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையினர் தங்கள் பணியாளர்களுக்கான எரிபொருள் கோரி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, தனியார் பஸ்கள் போதிய எரிபொருள் இன்றி தங்களது சேவையினை மட்டுப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக நாம் உரிய நேரத்திற்கு பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தினவரவை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திர பயன்பாடு இருப்பதனால் தாமதமாகி செல்கின்றபோது சில வேளைகளில் அரைநாள் கடமையாக பதியப்படுகின்றது. மாணவர்கள் முதல் பாடவேளையை வெறுமையாக கழிக்கின்றனர் - என்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடமாகாண ஆளுநர் - அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கிடையில் இணையவழி கலந்துரையாடல்

(யாழ். நிருபர்)

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் எமது சம்பளப் பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காவிடின் மீண்டும் வட மாகாண ஆளுநரை சந்தித்து அடுத்த கட்டம் தொடர்பாக கலந்துரையாட வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கும் இடையில் நேற்று முன்தினம் (28) இணையவழி கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள், வைத்தியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் வைத்தியர்களின் சம்பளத்தை குறைத்துள்ளதுடன் முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுவதை ஆளுநரிடம் சுட்டிக்காட்டியதுடன், இலங்கையின் இரண்டு மாகாணங்களிலேயே இந்த நிலை காணப்படுகிறது என்பதையும் ஆளுநருக்கு தெரிவித்ததாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கதிரமலை உமாசுதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் சுகாதார அமைச்சு மற்றும் நிதியமைச்சுடனான அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினுடனான சந்திப்பில் எமது சம்பள குறைப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஆளுநருக்கு தெரிவித்தோம். ஆகவே, இது தொடர்பான சுற்றுநிருபங்கள் பெற்று உடனடியாக வட மாகாண சுகாதார அமைச்சு செயல்பட வேண்டும் என வடமாகாண ஆளுநர் பணித்தார்.

வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும் நிலையே காணப்படுவதை சுட்டிக்காட்டியபோது இது தொடர்பில் உரிய பொறிமுறை ஒன்றை வகுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

# தாமதமாக வந்ததால் வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட மறுப்பு; மட்டு. போதனா வைத்தியசாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுமார் 100 பேர் வரையிலான சுகாதாரப் பணியாளர்கள் பொலன்னறுவை பிரதேசத்திலிருந்து கடமை நேரத்தின் பின்னர் வந்தடைகின்றபோதும் அவர்களை வரவு புத்தகத்தில் கோடிட்டு வரவு புத்தகத்தை மூடியதுடன், கையொப்பம் வைக்க விடாததையிட்டு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (29) வைத்தியசாலை நிர்வாக காரியாலயத்துக்கு முன்னால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த வைத்தியசாலையில் பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 100இற்கும் மேற்பட்ட தினமும் சுகாதாரப் பணியாளர்கள் அதிகாலை 4 மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறி, பொலன்னறுவை நகரை வந்தடைந்து அங்கிருந்து பஸ்ஸில் 100 கிலோ மீற்றர் தூரம் பயணித்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு காலை 7 மணிக்கு வந்தடைந்து, தமது கடமைகளை பெறுப்பேற்று பின்னர் கடமை நேரம் முடிவடைந்ததும் வீடு திரும்புவது வழக்கம்.

இந்நிலையில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை காரணமாக பொதுப் போக்குவரத்து பஸ்கள் சேவையில் ஈடுபடுவது குறைவடைந்துள்ள நிலையில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமைக்கு வருகின்றனர். நேற்று (29) பயணித்த பஸ் இடையில் எஞ்சின் கோளாறு நிறுத்தப்பட்டதன் காரணமாக கடமை நேரத்துக்கு வரமுடியாதென வைத்தியசாலை நிர்வாகத்திடம் தெரிவித்துக்கொண்டு காலை 9 மணிக்கு வைத்தியசாலையை வந்தடைந்தனர்.

இதன்போது வரவுப் புத்தகத்தில் குறித்த கடமை நேரத்துக்கு கீழ் அதற்கான நிர்வாக உத்தியோகத்தர் கோடு போட்டுள்ளதுடன், கையொப்பமிட வரவு புத்தகத்தை வழங்கப்படாது சுமார் 11 மணிவரை வைத்தியசாலை நிர்வாக காரியாலயத்துக்கு முன்னால் காத்திருந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் வைத்தியசாலை பணிப்பாளர் குறித்த சுகாதாரப் பணியாளர்களை குறித்த கடமை நேரத்தில் கையொப்பம் வழங்க விடுமாறு நிர்வாக உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கியதையடுத்து பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

# வீட்டில் எடுத்துவைக்கப்பட்டிருந்த பெற்றோல்; தீ பரவியதில் பெண்ணொருவர் உயிரிழப்பு

## திருகோணமலையில் சம்பவம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (29) காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் வீட்டிலிருந்த பெற்றோல் மூலம் தீ பரவியிருக்கலாமென பொலிஸாரின் விசாரணையில் தெரிவந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான ரவீந்திரன் சுதாசினி (47 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

உயிரிழந்த பெண் கடந்த நான்கு வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில், மாத்திரைகள் பாவித்து வருவதாகவும் நேற்றுக் காலை சாமி அறைக்கு சென்று விளக்கேற்றிவிட்டு தீக்குச்சியை கீழே வீசியபோது தீப்பற்றியதாகவும் சாமி அறைக்குள் அரை போத்தல் பெற்றோல் இருந்ததாகவும் இதனால் தீப்பற்றி இருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

ஆனாலும் சாமி அறைக்குள் பெற்றோல் பதுக்கி வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டை நிராகரிப்பதுடன், சாமி அறைக்குள் அரை போத்தல் பெற்றோல் மாத்திரம் இருந்ததாகவும் இறந்தவரின் உறவினர்கள் தெரிவித்தனர். உயிரிழந்த பெண்ணின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# இளைஞர் கழகங்களுக்கிடையிலான வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை திருகோணமலையில் மும்முரம்




(கந்தளாய் நிருபர்)

உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இளைஞர் கழகங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை நடவடிக்கை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

திருகோணமலை பீலியடி பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள கத்தரி, வெண்டி, கொச்சி மற்றும் மரவள்ளி போன்ற பயிர்கள் சிறப்பாக காணப்படுகின்றன.

இதற்கான பராமரிப்பு நடவடிக்கைகளும் ஆலோசனை வழிகாட்டல்களும் பிரதேச வெளிக்கள விவசாய அதிகாரிகள் மற்றும் இளைஞர் சேவை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செய்கைகள் கந்தளாய், கிண்ணியா, வெருகல் மற்றும் மூதூர் போன்ற பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# அக்கரைப்பற்றில் பதுக்கி வைத்திருந்த 35 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது



(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் வீடு ஒன்றை நேற்று (29) முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த 35 அரை லீற்றர் பெற்றோலுடன் ஒருவரை கைதுசெய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உளவுத்துறைக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய அக்கரைப்பற்று பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் நேற்று (29) பிற்பகல் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர். இதன்போது அங்கு பதுக்கி வைத்திருந்த 35 அரை லீற்றர் பெற்றோலை மீட்டதுடன் ஒருவரை கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கிண்ணியா நகர சபை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு





(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, கிண்ணியா நகர சபையின் சுகாதார ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் (28) காலை 9 மணியளவில் கிண்ணியா நகர சபைக்கு முன்னால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாம் எதிர்நோக்கும் எரிபொருள் பிரச்சினை, தூர இடங்களிலிருந்து சைக்கிள் மூலம் வருவதனால் ஏற்படும் பிரச்சினை அவற்றுக்கான தீர்வை பெற்றுத்தருமாறு கோரியே பணிப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது.

இதில் சுமார் 50இற்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

பின்னர் சுகாதார ஊழியர்களில் குறிப்பிட்ட சிலரை நகர சபை தவிசாளர் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கான பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்து தருவதாக கூறியதையடுத்து சுகாதார ஊழியர்கள் மீண்டும் தமது கடமைகளில் ஈடுபட்டனர்.

''சுகாதார ஊழியர்களான நாங்கள் நகர சபைக்கு முன்னால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட நிலையில், நகரசபைத் தவிசாளர் எங்களை அழைத்து எங்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதன் பின்னர் மீண்டும் நாங்கள் கடமைகளில் ஈடுபடுகின்றோம்'' என சுகாதார ஊழியர்கள் கூறினர்.

# வாகரை கதிரவெளி முன்பள்ளிப் பாடசாலை வளாகங்களில் பழ மரங்களை நடும் நிகழ்வு






(மட்டக்களப்பு நிருபர்)

முன்பிள்ளைப் பருவச் சிறார்களுக்கு மனதிற்கினிய சூழலாக கல்விக் கூடங்கள் அமைந்திருக்க வேண்டும் - என வாகரைப் பிரதேச செயலகப் பிரிவின் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி அலுவலர் ஆர்.கஜந்தினி தெரிவித்தார்.

கதிரவெளி முன்பள்ளிப் பாடசாலையில் நேற்று (29) இடம்பெற்ற நிகழ்வுக்குத் தலைமை தாங்கி அவர் உரையாற்றினார்.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), கொக்காகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவற்றினால் கூட்டிணைந்து மேற்கொள்ளப்படும் சூழல்நேய அபிவிருத்தித் திட்டங்களின் தொடராக முன்பள்ளி வளாகங்களில் பழ மரங்களை நடும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

முன்பிள்ளைச் சிறார்களின் பெற்றோர், பாதுகாவலர், நலன்விரும்பிகள் மற்றும் அலுவலர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய கஜந்தினி, முன்பிள்ளைப்பருவ சிறார்களுக்கு சிறப்பானதும் கற்கக்கூடிய ஆரோக்கியமானதும் மனதிற்கினியதுமான சூழல் அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் விரும்பி மன மகிழ்வோடும் மன நிறைவோடும் கற்றுக் கொள்வார்கள்.

அப்படிப்பட்ட ஒரு சுற்றுப் புறச்சூழலை உருவாக்குவதற்கு இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பு கரிசனையுடன் பணியாற்றி வருகிறது. அந்தவகையில் வாகரைப் பிரதேச முன்பள்ளிப் பாலர்கள் அவர்களது பெற்றோர் சார்பாக இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்புக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். வளர்ந்தவர்களாகிய நாம்தான் சிறார்களுக்கு முன் மாதிரிகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சிறந்த சூழலை நாம் அவர்களுக்குக் கையளிக்க வேண்டும்" என்றார்.

பழ மரங்கள் நடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் கருத்து தெரிவிக்கையில்,

''சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதும் ஆரோக்கியமான சமூகத்தை மேம்படுத்துவதுதான் இதன் நோக்கம். பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சுற்றுச் சூழலை எவ்வாறு கட்டமைத்துக் கொள்ளலாம் என்பதுபற்றி வளர்ந்தவர்களாகிய நாம் அவசரமாகவும் அவசியமாகவும் சிந்திக்க வேண்டும்.

வீட்டுச் சூழலையும் சுற்றுப்புறச் சூழலையும் சிறந்ததாகப் பராமரித்துக்கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு, ஆரோக்கியம் என்பவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதுவே நீண்டகால அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான சமுதாயத்திற்கும் சிறந்த வழியாகும்" என்றார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள் இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் உட்பட நலன்விரும்பிகளும் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்று அரிசி ஆலையில் கத்திக்குத்து

## ஒருவர் படுகாயம், ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றில் ஆண் ஒருவர் மீது நேற்று முன்தினம் (28) இரவு இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதுடன், கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டவரை கைதுசெய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த அரிசி ஆலையில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் அங்கு பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் (28) இரவு 10 மணிக்கு இருவரும் ஒன்றாக இருந்து மதுபானம் அருந்திய நிலையில் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமான ஒருவர் மீது ஒருவர் கத்தியால் குத்தி தாக்குதலை மேற்கொண்டதில் கத்திக்குத்து தாக்குதலுக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் கத்துக்குத்து தாக்குதலை மேற்கொண்ட மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடையவரை கைதுசெய்துள்ளதாகவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் தட்டுப்பாட்டால் கல்முனை பிராந்திய சுகாதாரத்துறையினருக்கு வாரத்தில் 3 நாட்கள் பணி

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் றிபாஸ்



(மாளிகைக்காடு நிருபர்)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சிக்கல்கள் இருப்பதனால் சுகாதாரத்துறையினரை வாரத்தில் மூன்று நாட்கள் பணிக்கு அழைப்பது, கடமை நேரத்தில் தளர்வுகளை ஏற்படுத்துவது, தூரத்திலிருந்து பணிக்கு வரும் பணியாளர்களை அவர்களுக்கு இலகுவாக சென்றடையக்கூடிய இடங்களுக்கு கடமைக்கு சமுகமளிக்க வாய்ப்புகளை ஏற்படுத்துவது போன்ற நிறைய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எங்களின் அலுவலகத்தில் கொரோனா காலத்தில் இருந்ததுபோல சுழற்சி முறையையும் அமுல்படுத்தி இரு வாரங்களில் ஐந்து நாட்களுக்கு மட்டும் கடமைக்கு சமுகமளிக்கும் முறைமையை அறிமுகம் செய்துள்ளோம். இருந்தாலும் நிலைய தலைவர்கள், நான் உட்பட நிறைவேற்று உத்தியோகத்தர்களை எல்லா நாளும் பணிக்கு அழைக்கும் நடைமுறையை ஏற்படுத்தி உள்ளோம் - என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

சமகால பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் பெறுதல் மற்றும் போக்குவரத்து சிக்கல்கள் தொடர்பில் சுகாதாரத்துறையின் விசேட ஏற்பாடுகள் பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் இங்கு கருத்து வெளியிட்ட அவர், சுகாதாரத்துறை 24 மணிநேரமும் பணியாற்ற வேண்டிய துறை. வைத்தியசாலைகளிலும் பணியாளர்களின் இடங்களுக்கு அண்மைய வைத்தியசாலைகளில் பணியாற்ற வாய்ப்புகளை ஏற்படுத்துவதுடன், ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள மதஸ்தலங்கள், ஓட்டோ சங்கங்கள், பொது அமைப்புகளின் உதவியுடன் கர்ப்பிணித் தாய்மார்கள், அவசர நோயாளர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துவரும் நடவடிக்கை தொடர்பில் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். நோயாளிகளின் கையில் வழங்கப்பட்டுள்ள நோய் நிர்ணய அட்டையில் அவசர அழைப்புகளுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதி அவசர தேவைகளுக்கு மட்டும் குறித்த சிறிய தூரங்களுக்கு வைத்தியசாலை அம்பியூலன்ஸை வீட்டுக்கு அனுப்பி நோயாளர்களை வைத்தியசாலைக்கு அழைத்துவருவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

மக்கள் எப்போதும் சுகாதாரத்துறைக்கு மரியாதை கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போது எரிபொருள் வரிசையில் பல மணிநேரங்களாக காத்திருந்த விரக்தியில் யாரை கண்டாலும் எரிந்து விழும் நிலையில் மக்கள் இருக்கிறார்கள். சுகாதாரத்துறைக்கு மட்டுமல்ல, இந்த பிரச்சினை சட்டத்துறை, காவல்துறை, கல்வித்துறை என எல்லா துறையினருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த பிரச்சினை இருக்கிறது. அத்தியாவசிய மற்றும் முன்னிலை சேவை வழங்கும் பணியாளர்களுக்கு ஒரு பொறிமுறையின் கீழ் அரசாங்கம் எரிபொருள் வழங்க நினைத்தாலும் கெடுபிடிகள் காரணமாக அது எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் வழங்க முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாட்டு அறிவிப்புகள் காரணமாக எதிர்காலத்தை கருத்திற்கொண்டு நிறைய எரிபொருள் இப்போது மக்களிடம் சேமிப்பில் இருக்கிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் மக்களுக்கு எவ்வளவு எரிபொருளை கொள்வனவு செய்து வழங்கினாலும் போதாத நிலையே இருக்கிறது - என்றார்.

# உணவு ஊக்குவிப்பு மற்றும் தேசிய உணவு கலாசாரத்தை மக்கள்மயப்படுத்தும் வேலைத்திட்டம்




(மட்டக்களப்பு நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உணவு வகை பயிரிடல், உணவு ஊக்குவிப்பு மற்றும் தேசிய உணவு கலாசாரத்தை மக்கள்மயப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் தலைமையில் நேற்று முன்தினம் (28) மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் எவ்வாறு உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளும் வழிமுறைகள் மற்றும் இவ்வுணவு பஞ்சத்தை ஈடுசெய்ய ஒவ்வொருவராலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் வீடுகளில் பயிர்செய்யும் முறைகள் தொடர்பாக இக்கருத்தரங்கில் விவரிக்கப்பட்டன.

அத்தோடு இக்கருத்தரங்கின் விரிவுரையாளர்களாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர்களான இளமாறன் மற்றும் லக்ஷ்மன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இராஜதுரை ஹரிஹரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களான ஐயநுலாப்தீன், மலர்செல்வன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் தனுசியா ரூட் பர்க்மன் மற்றும் மாவட்ட கலாசார திணைக்கள உத்தியோகத்தர்கள், கிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர்கள், இந்து கலாசார உத்தியோகத்தர்கள், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனையில் மேலதிக வகுப்புகளை 03 தினங்களாக மட்டுப்படுத்த தீர்மானம்

## வெள்ளிக்கிழமை கட்டாய விடுமுறை

(சாய்ந்தமருது நிருபர்)

பொருளாதார நெருக்கடி, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து செலவு என்பவற்றைக் கருத்திற்கொண்டு கல்முனை மாநகர பிரதேசங்களில் இயங்கிவருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் (டியூட்டரி) ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கையை 03 தினங்களாக மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.



கல்முனை மாநகர சபையில் கடந்த திங்கட்கிழமை (27) பிற்பகல் மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற டியூட்டரி நிர்வாகிகளுடனான கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தற்போதைய சூழ்நிலையில் ஒவ்வொரு நாளும் மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்கான தட்டுப்பாடு, முச்சக்கரவண்டிகளுக்கான அதிகரித்த கட்டணம், தனிப்பட்ட வாகனங்களாயினும் எரிபொருள் கிடைக்காமை உள்ளிட்ட காரணங்களினால் குறிப்பிட்ட சில காலத்திற்கு டியூட்டரிகளை மூடி, வகுப்புகளை இடைநிறுத்த வேண்டும் என்று பெற்றோர் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

நாட்டு நிலைமை விரைவில் சீராகிவிடும் என்ற நிச்சயம் இல்லாத நிலையில், வகுப்புகளை இடைநிறுத்துவதானது மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பாடத்திட்டத்தை முழுமையாக பூர்த்திசெய்ய முடியாத நிலைமை ஏற்படும் எனவும் சில டியூட்டரி நிர்வாகிகள் இதன்போது எடுத்துரைத்தனர்.

இந்நிலையில், வகுப்புகளை இடைநிறுத்தாமலும் வகுப்புகளின் எண்ணிக்கையை குறைக்காமலும் மாணவர்கள் வகுப்புகளுக்கு வருகின்ற நாட்களை குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு, அதனை அடிப்படையாகக்கொண்ட தீர்மானம் டியூட்டரி நிர்வாகிகளின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன்படி தற்போது 06 அல்லது 07 நாட்கள் வகுப்புகளில் பங்குபற்றுகின்ற ஒரு மாணவர் ஏதாவது 03 நாட்கள் மாத்திரம் வகுப்புகளுக்கு சமுகமளித்து, உரிய பாட வேலைகளை பூர்த்திசெய்யும் வகையில் இடைவேளை அடங்கலாக நேரசூசியை தயாரித்து, நடைமுறைப்படுத்துவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, கல்முனை மாநகராட்சி எல்லையினுள் சாப்புச் சட்டத்தின் பிரகாரம் வெள்ளிக்கிழமைகளில் எந்தவொரு தனியார் கல்வி நிலையமும் இயங்க முடியாது என்ற அறிவுறுத்தல் முதல்வரினால் இதன்போது வழங்கப்பட்டதுடன், இதனை மீறி, வெள்ளிக்கிழமைகளில் ஏதாவது தனியார் கல்வி நிலையம் இயங்குமாயின், அதன் நிர்வாகிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை நகரில் ஓரே பகுதியில் அருகருகே பல டியூட்டரிகள் இயங்குகின்ற நிலையில், வகுப்புகளுக்கு வருகின்ற மாணவர்கள் கலைந்து செல்லும்போது ஒழுங்கீனமாக நடந்து கொள்வதாகவும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்ட விடயமும் இதன்போது கலந்துரையாடப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், சி.எம்.முபீத், கே.செலவராசா, கல்முனை மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், வர்த்தக அனுமதிப்பத்திர பொறுப்பு உத்தியோகத்தர் யஹ்யா அரபாத், கல்முனை பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் அப்துல் வாஹித் உட்பட கல்முனை மாநகராட்சி எல்லையினுள் உயர்தர வகுப்புகள் நடத்தப்படுகின்ற டியூட்டரிகளின் நிர்வாகிகளும் பங்கேற்றிருந்தனர்.

# மட்டக்களப்பு ஐ.ஓ.சியில் எரிபொருள் விநியோகம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் (28) எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்கப்பட்ட நிலையில், அரச உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் எரிபொருள் நிலையத்திற்குள் குவிந்த காரணத்தினால் பதற்ற நிலை ஏற்பட்டது.




இதன்போது பெற்றோல் விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, குறித்த இடத்திற்கு வருகை தந்த மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், குறித்த எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் எம்.செல்வராசா ஆகியோர் மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து, விசேட ஒழுங்குபடுத்தலின் கீழ் எரிபொருள் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கும், பொதுமக்களுக்குமாக 6,600 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் குடாக்கரை மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்பு

(கிண்ணியா நிருபர்)



திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட குடாக்கரை பிரதேசத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மண்ணெண்ணெய் பயன்படுத்தும் இயந்திரப் படகுகள் உள்ளன.

வழக்கமாக மீன்பிடிக்க செல்வதற்கு கிண்ணியா மீனவர் மண்ணெண்ணெய் நிரப்பும் நிலையத்திலும், கிண்ணியா பாலத்திற்கு அருகாமையில் இருக்கும் எரிபொருள் நிரப்பும் நிலையத்திலும் மண்ணெண்ணெய் பெற்று வந்துள்ளனர். தற்போது பல நாட்களாக வரிசையில் இரவு பகலாக நின்றும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக வெள்ளைமணல் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், சின்னம்பிள்ளை சேனை ஜனசவிய மீனவர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அப்பகுதி மீனவர்களும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக உப தவிசாளர் முகம்மட் நௌபர் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் ஆலோசனைகளைப் பெற்று திருகோணமலை மாவட்ட செயலாளரிடம் நேற்று முன்தினம் (28) நேரில்சென்று குடாக்கரை மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மீனவர்கள் சார்பாக எழுத்து மூலமான கோரிக்கையினை முன்வைத்தார்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக மாவட்ட செயலாளர் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர், கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் மீன்பிடித் திணைக்கள திருகோணமலை மாவட்ட உதவி பணிப்பாளரிடமும் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தி குடாக்கரை மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக கலந்து உரையாடினார்.

மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் இப்பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடி மண்ணெண்ணெய் தொடர்பாக முடியுமான உதவிகளை செய்து தருவதாகவும் மாவட்ட செயலாளர் உப தவிசாளர் முகம்மட் நௌபர் அவர்களிடம் தெரியப்படுத்தியிருந்தார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று (29) நடைபெற்ற மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் பகிர்ந்தளித்தல் தொடர்பான கலந்துரையாடலில் குடாக்கரை பிரதேசத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட சுமார் 94 படகுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து குடாக்கரை மீனவ சமூகம் உப தவிசாளர் முகம்மட் நௌபரின் இம்முயற்சிக்கு நன்றிகளை தெரிவித்துக்கொண்டது.

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 208ஆவது ஆண்டு நிறைவு விழா




(வெல்லாவெளிநிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) 208ஆவது ஆண்டு நிறைவு விழா மிக எளிமையான முறையில் நேற்று (29) காலை 8.30 கல்லூரியின் முதல்வர் இராஜதுரை பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மதப்பெரியார்களான மட்டு. புளியந்தீவு மெதடிஸ்த திருச்சபையின் சேகர முகாமைக்குரு வண.ஏ.சாம் சுபேந்திரன், நாவற்குடா மெதடிஸ்த திருச்சபைக்குரு வண.எஸ்.முருகுப்பிள்ளை, கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.ஜீ.அருளானந்தம், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எந்திரி வை.கோபிநாத், பிரதி அதிபர் எஸ்.நந்தகோபால், பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பகீரதன், குருளைச்சாரணத் தலைவர் ந.பிரதீபன், ஆசிரியர்கள், குருளைச்சாரண ஆசிரியர்கள், மாணவர்கள், சாரண மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

இலங்கைத் திருநாட்டின் முதற்கல்லூரியாகவும், மட்டக்களப்பின் முதன்மை கல்லூரியாகவும், எட்டுத்திக்கும் பூத்துக் குலுங்கி மணம் பரப்பி பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி பொலிவுபெற்று, ஆயிரக்கணக்கான மாணவர்களையும், நூற்றுக்கணக்கான வைத்தியர் களையும், பொறியியலாளர்களையும், இன்னும் பல புத்திஜீவிகளையும் உருவாக்கியதுடன், இன்றுடன் 208ஆவது ஆண்டு நிறைவில் நன்றியோடு காலடி பதிக்கும் இவ்வேளையில் மட்டக்களப்பு புளியந்தீவு மெதடிஸ்த திருச்சபையில் நன்றி செலுத்தும் வழிபாட்டு ஆராதனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து காந்தி பூங்காவிலுள்ள கல்லூரியின் ஸ்தாபகர் வண.வில்லியம் ஓல்ட் அடிகளாரின் சிலைக்கு வர்ண பூமாலை அணிவிக்கப்பட்டு நினைவுகூரப்பட்டமை விசேட அம்சமாகும்.

## போடியார் புலம்பல்!



**நாசமறுப்பாக இலங்கையை மாற்றிப்போட்டு மக்கள றோட்டில உட்டுத்து அதுக்குள இராஜாங்க அமைச்சர் பதவிகளும் வழங்கப்போறானுகளாம் கவுண்ட மணி கோட்டாவும், செந்தில் ரணிலும்.**

**அடே மூள கெட்டவனுகளே முதலில் அத்தியாவசிய பொருளாக உள்ள டீசல், பெற்றோல், மண்ணெண்ணெயும் உங்களால எடுக்க வழங்காட்டி ஆட்சிய கட்டிப்பிடித்துத்து இருக்காம உட்டுத்து விலகுங்கடா..**

**இல்லாட்டி இந்தியாவுக்கு பாரம் கொடுத்துப்போட்டு பேசாம படுங்கடா! இராஜாங்க அமைச்சர் பதவியால என்னத்த புடுங்கபோறயல்..?**

# கரைவலை தொழில் செய்யும் மீனவர்களின் பிரச்சினையை அமைச்சர் டக்ளஸ் தீர்க்க வேண்டும்

## அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் லோகநாதன் கோரிக்கை

(மாளிகைக்காடு நிருபர்)



காரைதீவிலும் அண்டிய பிரதேசங்களிலும் கரைவலை மீன்பிடி தொழில்செய்கின்ற உறவுகளின் நீண்டகால பிரச்சினையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக நேற்று (29) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்கு பின்னர் காரைதீவிலும் அண்டிய பிரதேசங்களிலும் கரையோர கடல் பகுதிகளில் பிரமாண்டமான கற்பாறைகள் எழுந்து நிற்கின்றன. இது பாரம்பரிய கரைவலை மீனவர்களுக்கு பாரிய சவாலாக இருந்து வருகின்றது. பாறைகள் கிழித்து கரைவலைகள் அறுந்து விடுகின்றன. இதனால் கரைவலை மீனவர்களின் தொழில் மாத்திரம் அல்ல வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளது. வீண் செலவுகளும் ஏற்படுகின்றன.

கரைவலை மீனவர்கள் ஏழைகள். இந்நிலைமை தொடருமானால் எதிர்காலத்தில் இப்பிரதேசங்களில் கரைவலை மீன்பிடி தொழில் முற்று முழுதாக இல்லாமல் போகின்ற அவலமும் கண்முன் தெரிகின்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகின்ற வாரங்களில் ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் திறந்துவைக்க வருகின்றார் என்று அறிய கிடைக்கின்றது. அப்போது அவர் காரைதீவுக்கு கள விஜயம் மேற்கொண்டு, கரைவலை மீனவ உறவுகளை சந்தித்து பேசவேண்டும் என்று எமது மீனவ உறவுகள் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். அதிநவீன தொழில்னுட்ப பொறிமுறை மூலமாக கற்பாறைகளை அகற்றித்தர உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் வினயமாக வேண்டிக்கொள்கின்றேன் - என்றார்.

# வாகரைப் பிரதேச செயலக நிலங்களை மூன்று பகுதிகளாக பிரித்தெடுக்க முயற்சி

## நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்கள்)

வாகரைப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நிலங்களை மூன்று பகுதிகளாக பிரித்தெடுக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கு எதிராக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற மாவட்டத்தின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்துச் செயற்பட வேண்டும். அரசுடன் இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார் - என நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தோணிதாண்டமடு பிரதேசத்தின் ஒரு பகுதி பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தை பிரதேச செயலாளர் பிரிவினுள் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் வாகரைப் பிரதேச செயலாளருடன் இது தொடர்பில் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில நாட்களாக வாகரைப் பிரதேசத்தில் இருந்து தோணிதாண்டமடு என்கின்ற பிரதேசத்தின் ஒரு பகுதி பொலன்னறுவை மாவட்டத்துடன் இணைக்கப்படப் போவதாக தகவல்கள் வந்தன. அந்தவகையில் இன்றைய தினம் வாகரைப் பிரதேச செயலாளரைச் சந்தித்து இது விடயமாக கலந்துரையாடி விபரங்களைப் பெற்றுக்கொண்டேன். எல்லை நிர்ணய சபையினால் வாகரைப் பிரதேசத்தில் நாங்கள் பாரியதொரு பிரச்சினையை எதிர்கொள்ள இருப்பதாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.




அதாவது, வாகரைப் பிரதேசத்திலிருந்து மூன்று பகுதியாக பிரதேசங்கள் பிரித்து எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலாவதாக, தோணிதாண்டமடு தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தின் ஒரு பகுதி. தமிழ் மக்களுடன் சேர்த்து வெலிகந்தை பிரதேசத்துடன் சேர்க்கப்பட இருப்பதாகவும், அதேபோன்று ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகப் பிரிவுடன் புனானை கிழக்கு, கிருமிச்சை, காயான்கேணி, வட்டவான் உள்ளிட்ட சில பிரதேசங்கள் இணைக்கப்படுவதற்கான முயற்சிகளும், மறுபக்கம் வடக்கிலே வெருகல் இரட்டை ஆற்றை ஒட்டிய பிரதேசம் வெருகல் பிரதேச செயலகத்துடன் இணைக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் அறிகின்றேன்.

மூன்று பக்கத்தினால் வாகரைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசங்களைப் பிரித்தெடுப்பதற்கான அழுத்தங்களைக் கொடுத்து ஒரு பகுதியையாவது முழுமையாகக் கைப்பற்றக்கூடிய முயற்சியாகவே நான் இதனைக் கருதுகின்றேன். அது ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்துடன் காயான்கேணி, வட்டவான், புனானை கிழக்கு, கிருமிச்சை போன்ற பாரியதொரு நிலப்பரப்பினை இணைத்து ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்தினை வெலிகந்தை வரை விஸ்தரிப்பதற்கான செயற்பாடாகவே இதனைக் கருதுகின்றேன்.

அந்த வகையில் தமிழ்ப் பிரதேசம் என்பதற்கும் அப்பால் காலாகாலமாக வாகரைப் பிரதேச செயலக நிர்வாகத்திற்குட்பட்டு வாழும் மக்களும், நிலங்களும் வாகரைப் பிரதேச செயலகத்துடன் இருந்தவாறே இருக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் அரசுடன் இணைந்திருக்கின்றார்கள். ஒருவர் கடந்த காலத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்தவர். தற்போதும் அப்பதவியை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றார். மற்றையவர் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்தவர். தமிழ் மக்களுக்காக போராடிய போராட்ட இயக்கத்தில் இருந்தவர். தற்போது இந்த அரசின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக இருக்கின்றார்.

இவர்கள் இந்த விடயத்தில் கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் குறிப்பாக, முன்னாள் முதலமைச்சர் இந்தப் பிரதேசத்தில் இந்த மக்களின் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர். அவர் இந்த விடயத்தில் இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களைப் பொறுத்தமட்டில் நாங்கள் இவ்விடயத்திற்கு எதிராக எப்போதும் குரல் கொடுப்போம்.

என்னைப் பொறுத்தமட்டிலே இதற்கு ஒரே ஒரு தீர்வுதான் இருக்கின்றது. ஓட்டமாவடி மத்தி என்கின்ற பிரதேச செயலகப் பிரிவு நல்ல நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பிரதேச செயலகமல்ல என நான் அறிகின்றேன். குறைந்த கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுடன் ஒரு பிரதேச செயலகம் இருக்கவேண்டிய தேவையும் இல்லை. 7 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்தை ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலகத்துடன் இணைத்துவிட்டால் அவர்களுக்கான காணிப் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு வரும் என்பதே என்னுடைய எண்ணப்பாடு - என்றார்.

# சிரியா உள்நாட்டுப் போர்: 3 இலட்சம் பேர் பலி!



சிரியா உள்நாட்டுப் போரில் இதுவரை பொதுமக்கள் 3,06,887 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில்,

2011 மார்ச் முதலாம் திகதிமுதல் 2021 மார்ச் 31ஆம் திகதிவரை இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும், போரில் பலியான படையினர், பயங்கரவாதிகளின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாஜிக்களுக்கு உடந்தை: 101 வயது நபருக்கு சிறை



ஜேர்மனியில் யூதர்கள் உள்ளிட்டோரை நாஜிக்கள் கொன்று குவிப்பதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டின்பேரில் 101 வயது முதியவருக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜோசஃப் எஸ் என்ற அந்த நபர் 1940களில் பேர்லின் நகர்ப் பகுதியிலிருந்த தடுப்பு முகாமில் 3,518 பேர் படுகொலை செய்யப்படுவதற்கு உறுதுணையாக இருந்தமை நிரூபணமாகியுள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

## ஜோ பைடனின் மனைவி - மகள் உட்பட

# 25 அமெரிக்கர்களுக்கு ரஷ்யாவுக்குள் நுழைய தடை



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி, மகள் உட்பட மேலும் 25 அமெரிக்கர்கள் ரஷ்யாவுக்குள் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து விரிவடைவதன் எதிரொலியாக ரஷ்யாவுக்குள் நுழைய தடை விதிக்கப் பட்டவர்களின் பட்டியலில் மேலும் 25 அமெரிக்கர்கள் சேர்க்கப் படுவதாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.



## கொள்கலனில் அடைக்கப்பட்ட 51 அகதிகள் மூச்சுத் திணறி பலி



"சம்பவம் என் இதயத்தை நொறுக்கிவிட்டது" - பைடன் வேதனை

# பொலிஸார் மேற்கொண்ட ஆட்கடத்தல்; விசாரணையில் அதிர்ச்சித் தகவல் அம்பலம்

## கொள்கலனின் சாரதி உட்பட 3 பேர் கைது

## உயிரிழந்தவர்களில் மெக்சிக்கோவை சேர்ந்த 22 பேர் - 7 பேர் கௌத்தமாலா பிரஜைகள்

உலக செய்திகள்

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் கொள்கலனில் (கெண்டெய்னர்) சென்றபோது மூச்சுத் திணறி உயிரிழந்த அகதிகளின் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளது.

இது பொலிஸார் உட்பட சிலர் நடத்திய ஆட்கடத்தல் முயற்சி என்று அதிர்ச்சித் தகவல் விசாரணையில் தெரியவந்துள்ளது.

டெக்சாஸ் மாகாணத்தில் சான் ஆன்டோனியோ என்ற இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கொள்கலனொன்றில் 46 அகதிகளின் சடலங்களும் உயிருக்குப் போடிய நிலையில் 20 பேரும் மீட்கப்பட்டனர்.

உயிருடன் மீட்கப்பட்டவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், இறந்தவர்களின் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 16 பேரின் நிலைமை கவலைக்கிடமான நிலையிலுள்ளது.

இவர்கள் டெக்சாஸ் மாகாணத்தில் நிலவும் 103 டிக்ரி பரன்ஹீட் வெயிலுக்கு நடுவே கொள்கலனில் கடத்திச் செல்லப்பட்ட பிற நாடுகளைச் சேர்ந்த அகதிகள் என தெரியவந்துள்ளது.

மெக்சிக்கோ வழியாக அகதிகளாக புகுந்தவர்களை பொலிஸாரே கடத்திச் சென்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரே கொள்கலனுக்குள் அனைவரையும் அடைத்துச் சென்றதால் மூச்சுத் திணறியும் தண்ணீர் இல்லாமலும் அதீத உஷ்ணத்தாலும் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தனது இதயத்தையே நொறுக்கிவிட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களில் 22 பேர் மெக்சிக்கோவைச் சேர்ந்தவர்கள். 7 பேர் கௌத்தமாலாவைச் சேர்ந்தவர்கள். இந்தச் சம்பவம் தொடர்பாக கொள்கலனின் சாரதி உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எதற்காக அகதிகள் கடத்திச் செல்லப்பட்டனர் என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# போர் முடிய எத்தனைக் காலமானாலும் உக்ரைனுக்கு ஆதரவு தொடரும்

## ஜி-7 நாடுகள் தீர்மானம்



"எத்தனைக் காலமானாலும் ரஷ்யாவிடமிருந்து உக்ரைனை பாதுகாக்க துணை நிற்போம்'' - என ஜி-7 நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

ரஷ்யாவுக்கு மசகு எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாயைத் தடுத்து நிறுத்தவும் உறுதி எடுக்கப்பட்டுள்ளது. ஜி-7 மாநாட்டில் ரஷ்யாவுக்கு கடுமையான பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய், தங்கம் இறக்குமதியைத் தடை செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கருங்கடல் வழியாக உக்ரைனுக்கு உணவு தானியங்கள் கொண்டுசெல்ல உதவவும் ஜி-7 நாடுகள் உறுதியளித்துள்ளன.

# பணம் தேவைப்படும் சிறு நாடுகளுக்கு யுவான் கரன்சியில் கடன் வழங்கும் சீனா



சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்க டொலரை தவிர்த்துவிட்டு, பணம் தேவைப்படும் சிறு நாடுகளுக்கு தனது நாட்டு கரன்சியில் கடன் வழங்க முடிவுசெய்து, யுவான் நிதித் தொகுப்பொன்றை சீனா உருவாக்கியுள்ளது.

இதற்காக சீனாவின் மத்திய வங்கி, சுவிட்சர்லாந்திலுள்ள சர்வதேச தீர்வுகளுக்கான வங்கியுடன் (பிஐஎஸ்) ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த நிதி தொகுப்பு ஒப்பந்தத்தில் சீனாவுடன் இந்தோனேஷியா, மலேசியா, (ஹொங்கொங்)) சிங்கப்பூர் மற்றும் சிலி ஆகிய 5 நாடுகள் இணைந்துள்ளன

# கொலம்பியா சிறையில் கலவரம்

## 51 கைதிகள் படுகொலை; பலர் படுகாயம்

கொலம்பியாவில் சிறைக் கைதிகளிடையே ஏற்பட்ட கலவரம், தீ வைப்பு சம்பவங்களில் 51 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

படுக்கை மற்றும் மெத்தைகளுக்கு கைதிகள் தீ வைத்ததில் சிறை முழுவதும் தீ பரவி 51 பேர் உயிரிழந்தனர். தீ மற்றும் வெட்டுக் காயங்களுடன் 20இற்கும் மேற்பட்ட கைதிகள் மற்றும் சிறைக்காவலர்கள் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த கைதிகளின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தாய்வானை உலுக்கிய மூன்று நிலநடுக்கங்கள்

தென்மேற்கு தாய்வானில் ஒரே நாளில் அடுத்தடுத்து மூன்று நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

தரைப்பகுதியிலிருந்து 20 கி.மீ. ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 5.3 ஆக பதிவானதாக நிலஅதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக, காலையில் 2 மணிநேர இடைவெளியில் தென்மேற்கு தாய்வான் கடற்கரையில் 5 மற்றும் 4.8 ரிச்டர் அளவிலான இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

# நடிகை மீனாவின் கணவர் காலமானார்



பிரபல தென்னிந்திய நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் உடல்நலக்குறைவு காரணமாக நேற்றுமுன்தினம் (28) காலமானார்.

இது திரையுலக வட்டாரத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மீனாவின் கணவரின் மறைவுக்கு திரைத்துறையினர், ரசிகர்கள் பலரும் தங்களது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். வித்யாசாகரின் உடல் சென்னையிலுள்ள மீனாவின் சைதாப்பேட்டை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ரஜினிகாந்த், பிரபுதேவா, ரம்பா குடும்பத்தார், விஜயகுமார் குடும்பத்தார், சேரன், மன்சூர் அலிகான், பழம்பெரும் நடிகை லட்சுமி, சங்கீதா, குஷ்பு உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் வித்யாசாகரின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, மீனா மற்றும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

இதனையடுத்து வித்யாசாகரின் உடல் நேற்று மேல் சென்னை, பெசன்ட் நகரிலுள்ள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தமிழ், மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் நடித்துப் பிரபலமானவர் நடிகை மீனா. இவர் கடந்த 2009ஆம் ஆண்டு வித்யாசாகர் என்ற தொழிலதிபரை திருமணம் செய்துகொண்ட நிலையில், இவர்களுக்கு நைனிகா என்ற மகள் இருக்கிறார். 'தெறி' படத்தில் நடிகர் விஜய்யின் மகளாக நைனிகா நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்நிலையில், பெங்களூரில் அவர்கள் வசித்த வந்த வீட்டுக்கு அருகே நிறையப் புறாக்கள் வளர்க்கப்படும் இடம் இருந்ததாகவும், அந்த புறாக்களின் எச்சம் கலந்த காற்றை சுவாசித்ததால் வித்யாசாகர் கடந்த சில ஆண்டுகளாக நுரையீரல் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து அண்மையில் மீனாவின் குடும்ப உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது. இந்த தொற்றிலிருந்து மீண்ட வித்யாசாகருக்கு நுரையீரல் தொற்று தீவிரமடைந்துள்ளது.

இதனையடுத்து சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. சில வாரங்களுக்கு முன்பு வித்யாசாகருக்கு நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் பரிந்துரைத்திருந்ததாக கூறப்படுகிறது. ஆனால், பொருந்தக்கூடிய நுரையீரல் கிடைக்காததால் அறுவை சிகிச்சை நடைபெறாமல் இருந்துள்ளது. இந்நிலையில், அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், நடிகர் சரத்குமார் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள இரங்கல் செய்தியில், நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகரின் மரண செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். நடிகை மீனாவிற்கு எனது குடும்பத்தினர் சார்பாக இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறேன். அவரது ஆத்மா சாந்தியடையட்டும் என்று தெரிவித்துள்ளார்.



# கலிபோர்னியாவை சூறையாடிய காட்டுத் தீ

## 135 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசம்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயால் 135 ஏக்கர் பரப்பளவுகொண்ட வனப்பகுதி தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது.

ரெட்வுட் சானிட்டரி லாண்ட்ஃபில் அருகே நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பற்றியெரியும் காட்டுத் தீயால் அங்கு சுற்றுச்சூழல் பெரும் மாசடைந்துள்ளது.

இந்த காட்டுத் தீயால் கலிபோர்னியாவின் வான்வெளி முழுவதும் அடர் செந்நிறமாக மாறியதுடன், புகை மண்டலங்களாகவும் காட்சியளித்தன. காடுகள் கருகி சாம்பலாகியுள்ள நிலையில், இதுவரை 75 சதவீதக் காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# சிறைச்சாலைகளிலுள்ள விடுதலைப் புலி சந்தேக நபர்கள் தொடர்பில் அரசு கவனம்

## நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



விடுதலைப் புலி உறுப்பினர்களென சந்தேகத்தின்பேரில் சிறைச்சாலைகளிலிருந்து வருவோரின் விடுதலை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

குற்றமிழைத்தவர்களாக காணப்படுவோரே எஞ்சியுள்ளனர். இதுதொடர்பாக நாம் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றோம். இராஜதந்திர ரீதியில் தீர்மானத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறான தீர்மானம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறமுடியாது என்றும் அவர் கூறினார்.

தனது சமீபத்திய வடக்கிற்கான விஜயத்தின் போது இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் (28) மாலை நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக விசாரணைகளின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களென சந்தேகிக்கப்படுவோரின் விடுதலை குறித்து உங்களது யாழ் விஜயத்தின்போது ஆராயப்பட்டதா என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2015ஆம் ஆண்டில் இது குறித்து விரிவாக ஆராய்ந்தோம். அப்போது சிறைச்சாலைகளில் 200 விடுதலைப் புலி சந்தேக உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களின் இந்த எண்ணிக்கையை 70 ஆக குறைத்தோம். இந்த விடயம் குறித்து மேலெழுந்தவாறு தீர்மானத்தை மேற்கொள்ள முடியாதவகையில் பாரிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் இருந்தனர்.

இதுதொடர்பாக கொழும்பிலும் அநுராதபுரத்திலும் இரண்டு விசேட நீதி மன்றங்களை ஏற்படுத்தி வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்கான ஒழுங்குகள் செய்துகொடுக்கப்பட்டன. இதற்கமைவாக இன்னும் குறைந்த எண்ணிக்கையிலான வழக்குகளே உள்ளன. அடுத்த குழு, அதாவது குற்றமிழைத்தவர்களாக காணப்படுவோரே இருக்கின்றனர். இதுதொடர்பாக நாம் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றோம். இராஜதந்திர ரீதியில் தீர்மானத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். எவ்வாறான தீர்மானம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறமுடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனது கடந்தவார யாழ். விஜயத்தின்போது அங்குள்ள மக்கள் நூற்றுக்கணக்கான பிரச்சினைகளை முன்வைத்தனர். பெரும்பாலான பிரச்சினைகளுக்கு எம்மால் தீர்வு காண முடிந்தது. மூன்று வழிகளில் இதனை முன்னெடுத்துள்ளோம். ஒன்று, காணாமற்போனோர் அலுவலகத்தை நடத்திவருகின்றோம்.

கடந்த வாரம்முதல் விசாரணைகளை மீள ஆரம்பித்துள்ளோம். இதேபோன்று சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குதல். இதற்காக தனியாக அலுவலகத்தை நடத்திவருகின்றோம். தீர்மானங்களின் அடிப்படையில் இழப்பீடு வழங்கும் நடவடிக்கையையும் ஆரம்பித்துள்ளோம். வடக்கில் நல்லிணத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது இது குறித்து விரிவான வகையில் கலந்துரையாடப்பட்டதுடன், ஆக்கபூர்வமான நடவடிக்கையிலும் கவனம் செலுத்தப்பட்டது. இன்னும் தீர்வு காணப்படாத பொதுமக்களின் விடயங்களுக்கு நடமாடும் சேவைகள் ஊடாக தீர்வுகளை வழங்கவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஹோமாகம தீ விபத்து

# வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 19 வயதுடைய யுவதி உயிரிழப்பு

ஹோமாகம தீ விபத்தில் தாயும் தந்தையும் உயிரிழந்த நிலையில், கடும் தீக்காயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த 19 வயதுடைய மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம மாகம்மன பிரதேசத்தில் இரண்டு மாடி வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் கணவன், மனைவி உயிரிழந்துள்ளதோடு, அவர்களின் பெண் பிள்ளைகள் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த தீ விபத்துச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்றிருந்த நிலையில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இதில் தாய் மற்றும் தந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில், ஒரு மகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மற்றைய மகள் கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தனர்.

இந்நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த 19 வயதுடைய யுவதி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த யுவதியின் தாய், தந்தையின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊவா-வெல்லஸ்ஸ பல்கலையின் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

ஊவா-வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் உள்வாரி கல்வி நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றிலிருந்து (29) மீள அறிவிக்கும் வரையில் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப் பட்டிருப்பதாக அந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்ன சேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது,

நாட்டிலுள்ள தற்போதைய நெருக்கடி நிலையினால், குறிப்பாக எரிபொருள் நெருக்கடியை கவனத்திற்கொணடு ஊவா-வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் சகல கற்கைநெறிகளினதும் உள்வாரியாகபல்கலைக்கழக வளாகத்துக்குள் முன்னெடுக்கப்படும் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் தற்போது முன்னெடுக் கப்பட்டுவரும் கல்வி நடவடிக்கைள் அதே முறையில் முன்னெடுக்கப்படும். எரிபொருள் தட்டுப்பாடே தற்போதுள்ள பிரதான பிரச்சினை யாகும். எரிபொருள் தட்டுப்பாடு சீரானதும் மிக விரைவில் மாணவர்களை பல்கலைக்கழக வளாகத்து வரவழைக்க எதிர்பார்த்துள்ளோம். எது எவ்வாறாயினும் இறுதி வருடத்திலுள்ள மாணவர்களின் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருவோம் - என்றார்.

# வாரத்தில் மூன்று நாட்கள் தபாலகங்கள் இயங்கும்

### தபால் மா அதிபர் அறிவிப்பு

நாட்டில் அனைத்து தபால் அலுவலகங்களும் செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் மாத்திரம் திறந்திருக்கும் என தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து சிக்கல்களை கருத்திற்கொண்டு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்காக மாத்திரம் அரச அலுவலகங்களை திறப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

தற்போது நிலவும் காகித தட்டுப்பாடு காரணமாக தபால் சேவைக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. தபால் சேவைக்கான முத்திரைகள் மற்றும் கடித உறைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உள்ளக கடித சேவைக்காக கடதாசி பயன்படுத்துவதற்கு பதிலாக மின் அஞ்சலை பயன்படுத்துவதற்கு தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகவும் தபால் மா அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிரேஷ்ட பிரஜைகள் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட கொடுப்பனவுகள், சர்வதேச தபால் மூலம் பல்வேறு பொருட்கள் கிடைப்பதன் காரணமாகவும் தபால் பொருட்களை விநியோகிக்க நேர்ந்துள்ளமை உள்ளிட்ட காரணங்களை கருத்திற்கொண்டு குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரு நாட்டுக்கும் இடையிலான பொருளாதாரம் - அரசியல் தொடர்புகளை மேலும் வலுப்படுத்த ஒத்துழைப்போம்

## அமைச்சர் விஜேதாசவுடனான சந்திப்பில் மலேசிய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் டென் யங்க் தாய் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது.

குறிப்பாக, இரு நாட்டுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தக மற்றும் இராஜதந்திர உறவுகள் தொடர்பிலும் இலங்கை மற்றும் மலேசியாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாட்டுக்கும் இடையில் நீண்டநாள் உறவுகள் பேணப்பட்டு வருவதாகவும், இலங்கை தற்போது சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியை சீர்செய்வதற்காக மலேசிய அரசாங்கத்தின் உதவி அவசியம் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் என்ற அடிப்படையில் இரு நாட்டுக்கும் இடையில் இருக்கும் தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், தேவையான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு தமது நாட்டினால் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித் துள்ளார்.

அமைச்சின் மறுசீரமைப்பு தொடர்பான மேலதிக செயலாளர் துஷார சூரவீர மற்றும் மலேசிய உயல்தானிகர், காரியாலயத்தின் அதிகாரிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

# பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையத்தை விற்க விடமாட்டோம்

## தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில், அந்நெருக்கடியை பொருட்டாக வைத்து நாட்டின் பெறுமதியான வளங்களில் ஒன்றான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய ராஜபக்ஷ குடும்பத்தினர் தலைமையிலான இந்த அரசின் முயற்சிகளை வன்மையாக கண்டிப்பதாகவும், இதில் சம்பந்தப்படும் சகல அமைச்சர்கள் மற்றும் செயலாளர்கள் ஐக்கிய மக்கள் சக்தியினால் அமையப்பெறும் அரசாங்கத்தின் கீழ் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (28) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய முழுமையான செயல்பாட்டின் ஊடாக 100% மண்ணெண்ணெய் தேவையையும், சுமார் 50% விமானங்களுக்கான எரிபொருள் தேவையையும், 100% நெக்டா தேவையையும், 30% டீசல், 14% பெற்றோல், 8% எரிவாயு, மின் உற்பத்திக்குத் தேவையான பதப்படுத்தல் எரிபொருள் 75-100% வரையான தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய பெறுமதி மிக்க வளமாகும் .

இந்நாட்டிலுள்ள தூரநோக்கற்ற, வினைதிறனற்ற அரச நிர்வாகத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள சீர்குலைவின் காரணமாக இந்த தேசிய வளத்தை திருட்டுத்தனமாக ஏலம் விடுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. அரசுக்குச் சொந்தமான மதிப்புமிக்க நிறுவனங்களை ஏலம் போட முயற்சி நடந்தால், அதற்கெதிராக கட்சிப் பேதங்கள் இன்றி ஒரே நிலைப்பாட்டின் கீழ் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அவ்வாறே, இந்த அரச வளத்தைப் பாதுகாக்க முன்வந்த பெற்றோலிய தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறோம் - என்றார்.

ஐக்கிய தொழிலாளர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சேனக பெரேரா, சரத் அபேரத்ன, மனுல சமில் ஏக்கநாயக்க, இலங்கை சுதந்திர தொழிற்சங்க கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி கே.பி.சமிந்த, எஸ்.வி.மாயாதுன்ன, பொது ஊழியர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அசோக் ரன்வல, மனோஜ் விஜேவீர, நிறைவேற்று அதிகாரிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஆர்.ஏ.டி.திலங்க, தேசிய ஊழியர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஏ.சி.வசந்த, வீரபாகு பெரேரா, பெற்றோலிய கைத்தொழில் ஊழியர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி எல்.டி.சமரகோன், எல்.பிரியதர்ஷன, பொறியியலாளர்கள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விக்கும் மாதவ, ஜனக உதான, லசந்த ஏக்கநாயக்க, லக்சிறி ரணதுங்க, சுத்திகரிப்பு கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி ஆக்ரா வீரசிங்க, சலக விஜேசிங்க உட்பட பிரதிநிதிகள் கலந்து கொண்டதோடு, ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ராஜித சேனாரத்ன உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நிலைவரம் தொடர்பிலும், இதிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இங்கிலாந்து பயணத்துறையினருடன் சந்திப்பு

## சுற்றுலாத்துறை வாய்ப்பு குறித்தும் எடுத்துரைப்பு













அண்மையில் லண்டனுக்கு விஜயம் செய்திருந்த சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இங்கிலாந்து பயணத்துறையினரை சந்தித்தார்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடுசெய்திருந்த இந்த ஊக்குவிப்பு நிகழ்வானது, இலங்கைக் கான அத்தியாவசியமற்ற பயணங்களை மேற் கொள்வதனை தவிர்க்குமாறான ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் ஆலோசனை ஜூன் 11ஆம் திகதி நீக்கப்பட்டதன் பின்னணியில் சரியான நேரத்தில் இடம்பெற்றது.

சுற்றுலா நடத்துனர்கள், பயண சங்கங்கள், பயண ஊடக மற்றும் விமான நிறுவனங்கள் மற்றும் விருந்தோம்பல் துறையின் பிரதிநிதிகள் உட்பட 60இற்கும் மேற்பட்ட இங்கிலாந்து பயணத்துறைத் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் 2ஆவது பெரிய பிறப்பிடம் இங்கிலாந்தாகும்.

வரவேற்பு உரையை ஆற்றிய உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, கடினமான சூழ்நிலைகளை வெற்றிகொண்ட ஒரு மீள்குணமிக்க நாடாக இலங்கை திகழ்வதாகத் தெரிவித்தார். இலங்கையை அடுத்த விடுமுறை இடமாக மேம்படுத்துவதற்கு இலங்கை தனது நட்பு நாடுகளின் ஆதரவை நம்பியுள்ளது. பயணிகளின் ஆறாவது அறிவைத் தட்டிக் கேட்கும் தனித்துவமான ஒன்றை இலங்கை வழங்குகின்றது. இலங்கைக்கு ஒரு முறை விஜயம் செய்யும் ஒரு பயணி, தன்னுடன் எடுத்துச்செல்லக்கூடிய அளவிலான இலங்கை யின் தனித்தன்மையை அனுபவிக்கின்றார்.

உயர்ஸ்தானிகராலயத்தின் அமைச்சர் (வர்த்தகம்) கலாநிதி லக்மினி மெண்டிஸ் நிகழ்வின் மூன்று சிறப்பு பேச்சாளர்களான ஐக்கிய இராச்சியத்தின் சுதந்திர பயண செயற்படுத்துனர் சங்கத்தின் வர்த்தகத் தலைவர் பாரத் கடோக், வெண்டர்லஸ்ட் இதழின் நிறுவனர் ஆசிரியர் லின் ஹியூஸ் மற்றும் லோன்லி பிளானெட்டின் அனுபவங்களுக்கான துணைத் தலைவர் டொம் ஹோல் ஆகியோரை அறிமுகப்படுத்தினார்.

ஒரு பயணி ஈடுபடக்கூடிய நடவடிக்கை களின் விரிவான பட்டியல் இருப்பதால், விசேட பயணிகள் இலங்கை போன்ற தனித்து வமான நாடுகளுக்குச் செல்ல வேண்டும் எனக் கருதுவதாக பாரத் காதோக் குறிப்பிட்டார். கடந்த காலத்தில் செய்ததுபோல் இங்கிலாந்தின் பயணிகளிடையே இலங்கையை மேம்படுத்து வதற்கு சுதந்திர பயண செயற்படுத்துனர் சங்கம் தயாராக இருப்பதாக அவர் உறுதியளித்தார்.

வெண்டர்லஸ்ட் இதழ் தொடக்கத்திலிருந்து, இலங்கையை வாசகர்களிடையே மிகவும் பிரபலமான இடமாகக் கருதி வருவதாகவும், கடந்த ஆண்டு வெண்டர்லஸ்ட் விருதுகளின் மூலம், பயணிகளின் முதல் 10 இடங்களில் ஒன்றாக இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் லின் ஹியூஸ் விளக்கினார்.

இலங்கைக்கான அத்தியாவசியமற்ற பயணங்களுக்கான இங்கிலாந்து பயண ஆலோசனையை நீக்கியதன் பின்னர் அவர்களது இணையத்தளத்தில் இலங்கை என்ற தேடுதல் 100% அதிகரித்துள்ளது என்பதை அவர் எடுத்துரைத்தார். லோன்லி பிளானட்டில் தனது பயண அனுபவத்தின் மூலம், பயணி ஒருவர் பார்வையிடக்கூடிய சிறந்த தீவு இலங்கை என்பதை தன்னால் உறுதிப்படுத்த முடியும் என டொம் ஹோல் குறிப்பிட்டார்.

லோன்லி பிளானட் 1973இல் இதழின் தொடக்கத்திலிருந்து இலங்கையில் 13 பயண வழிகாட்டிகளை வெளியிட்டதுடன், 2019இல் பயணிப்பதற்கான இலக்கம் 01 என்ற அங்கீகாரத்தைப் பெற்றது.

நாட்டின் தற்போதைய நிலைமையை சமாளிக்க இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விளக்கமளித்தார். இலங்கையின் விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறையில் முதலீட்டு வாய்ப்புகளையும் அமைச்சர் எடுத்துரைத்தார். சுற்றுலா அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், இந்த ஆண்டு குளிர்கால விடுமுறைக் காலத்தில் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க இலங்கை தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

# மூன்று ஆண்டுகளின் பின்னர் நியூசிலாந்து செல்லும் இலங்கை அணி



இலங்கை கிரிக்கெட் அணியானது நியூசிலாந்து அணியுடன் மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் ஆடுவதற்காக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறது.

முதல் தொடரான இரு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி 2023 மார்ச் 9ஆம் திகதி கிறைஸ்ட்சேர்ச் நகரில் ஆரம்பமாகிறது. பின்னர் ஐ.சி.சி. உலகக்கிண்ண சுப்பர் லீக் தொடரின் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் நடைபெறுகிறது.

ஒருநாள் தொடரை அடுத்து இரு அணிகளும் மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் ஆடுகின்றன. இறுதியாக 2019ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் அணி, அங்கு மூவகையான கிரிக்கெட் தொடர்களிலும் ஆடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சுற்றுத்தொடர் அட்டவணை**

மார்ச் 09-13 – முதல் டெஸ்ட் போட்டி – கிறைஸ்ட்சேர்ச்
மார்ச் 17-21 – இரண்டாவது டெஸ்ட் போட்டி – வெலிங்டன்
மார்ச் 25 – முதலாவது ஒருநாள் போட்டி – ஒக்லேண்ட்
மார்ச் 28 – இரண்டாவது ஒருநாள் போட்டி – கிறைஸ்ட்சேர்ச்
மார்ச் 31 – மூன்றாவது ஒருநாள் போட்டி – ஹமில்டன்
ஏப்ரல் 02 – முதலாவது இருபதுக்கு 20 போட்டி – ஒக்லேண்ட்
ஏப்ரல் 05 – இரண்டாவது இருபதுக்கு 20 போட்டி – டனேடின்
ஏப்ரல் 08 – மூன்றாவது இருபதுக்கு 20 போட்டி – குயின்ஸ்டவ்ன்

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# விடைகொடுத்த உலகக்கிண்ண சாதனை நாயகன்

## அடுத்த தலைவராக ஜோஸ் பட்லர்?



இங்கிலாந்து வெள்ளைபந்து (ஒருநாள், இருபதுக்கு 20) அணியின் தலைவரான இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு வரலாற்றில் முதல் முறையாக உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த சாதனை அணித்தலைவர் ஒயின் மோர்கன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக நேற்று முன்தினமிரவு அறிவித்தார்.

35 வயதான மோர்கன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இந்த வாரம் ஓய்வு பெறவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் அது உறுதியாகியுள்ளது. "கவனமாகவும், நிதானமாகவும் யோசித்து எடுத்த தீர்மானத்திற்கமைய உடனடி அமுலுக்குவரும் வகையில் நான் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஓய்வினை அறிவிக்கின்றேன்'' என ஒயின் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்து அணி்a மோர்கன் வழிநடத்துவாரென எதிர்பார்க்கப்பட்டபோதும், அவர் கடந்த 18 மாதங்களாக மோசமான துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்திவருகின்றமை அவரின் ஓய்வுக்கு பிரதான காரணமாக அமைவதாக ஆங்கில ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அயர்லாந்து நாட்டைப் பிறப்பிடமாகக்கொண்ட மோர்கன், கடந்த 2006ஆம் ஆண்டு அயர்லாந்து கிரிக்கெட் அணிக்காக சர்வதேச அறிமுகம் பெற்றிருந்தார். பின்னர் 2009ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்து கிரிக்கெட் அணியினை சர்வதேச அரங்கில் பிரதிநிதித்துவம் செய்யத் தொடங்கிய அவர், 248 ஒருநாள், 115 இருபதுக்கு 20 மற்றும் 16 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கு அடுத்தபடியாக ஜோஸ் பட்லர் வெள்ளை பந்து அணியின் தலைவராகலாமென தெரிகிறது.

# டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக ஆட்டநிர்ணய சதியா?

## விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவினால் விசாரணைகள் ஆரம்பம்



சுற்றுலா ஆஸி. - இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடரில் ஆட்டநிர்ணய சதி முயற்சிகள் இடம்பெற்றதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து விளையாட்டமைச்சின் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. நேற்று ஆரம்பமான இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக ஆட்டநிர்ணய சதி முயற்சிகள் இடம்பெற்றதா என்பது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஜகத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையை சேர்ந்த சுற்றுலாப்பயணிகளுக்கான வழிகாட்டியொருவர் மூலம் எங்களுக்கு தகவல் கிடைத்தது, அவர் காலி மைதானத்தின் ஆடுகளத்தின் தன்மை குறித்த அறிக்கையை பெறுவதற்கு அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தினார் என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். அவரை விசாரணை செய்த வேளை, அயல் நாடொன்றை சேர்ந்த வெளிநாட்டவரின் செல்வாக்கிற்கு இவர் உட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம் எனவும் ஜகத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னர் இந்த நபர் இலங்கையை சேர்ந்தவரை பயன்படுத்தி ஆடுகளத்தின் தன்மையை அறிய முயன்றுள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சுகததாச மைதானத்தை சேர்ந்த விசேட பொலிஸ் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டியொருவரை ஏற்கனவே விசாரணை செய்துள்ள பொலிஸார், காலி கிரிக்கெட் மைதான முகாமையாளரையும் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். இலங்கை அதிகாரிகள் இது குறித்து ஐ.சி.சியின் ஊழல் தடுப்பு பிரிவுக்கும் அறிவித்துள்ளனர்.

# கல்முனை அல்–பஹ்றியா தேசிய பாடசாலை சம்பியனாக தெரிவு

(கல்முனை நிருபர்)

கல்முனை கல்வி வலயத்தின் முஸ்லிம் கோட்ட பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் போட்டி அண்மையில் நற்பிட்டிமுனை அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் நடைபெற்றது.

இந்த மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை, நற்பிட்டிமுனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 14 முஸ்லிம் பாடசாலைகள் பங்குபற்றின. மெய்வல்லுனர் போட்டியில் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.



இப்போட்டியில் பங்குபற்றிய அல்-பஹ்றியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மாணவ, மாணவிகள் 19 முதலாம் இடங்களையும், 17 இரண்டாம் இடங்களையும், 6 மூன்றாம் இடங்களையும் பெற்று கல்முனை முஸ்லிம் கோட்ட மெய்வல்லுனர் சம்பியனாக தெரிவாகினர்.

இவ்வெற்றிக்காக மாணவர்களை பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர்கள் வாழ்த்துகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# ரோஹிட் தலைமைப் பதவியில் இருந்து விலக வேண்டுமாம்



இந்திய இருபதுக்கு 20 அணியின் தலைமை பதவியில் இருந்து ரோஹிட் சர்மா விலக வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் வீரர் விரேந்திர ஷேவாக் கூறியுள்ளார். அவர் அளித்த ஒரு பேட்டியில், "20 ஓவர் போட்டிக்கான இந்திய அணியின் தலைவராக புதிதாக ஒருவரை கொண்டு வர அணி நிர்வாகம் மனதில் நினைத்தால் 35 வயதான ரோஹிட் சர்மா அந்த பதவியில் இருந்து விலக வேண்டும். அப்படி செய்தால் இந்த வயதில் அவர் தனது பணிச்சுமையையும், மனச்சோர்வையும் நிர்வகிக்க நன்றாக இருக்கும்."

"அத்துடன் 20 ஓவர் போட்டிக்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டால், ரோஹிட் சர்மா நல்ல ஓய்வு எடுத்து கொண்டு புத்துணர்ச்சியுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியை சிறப்பாக வழிநடத்த உதவிகரமாக இருக்கும். மூன்று வடிவிலான இந்திய அணியையும் ஒருவரே வழிநடத்த வேண்டும் என்ற கொள்கையை இந்திய அணி நிர்வாகம் இன்னும் விரும்பினால் அதற்கு ரோஹிட் சர்மாவே சிறப்பானவர் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்தார்.



மறைந்த ஆஸி. ஜாம்பவான் ஷேன் வோர்னின் குடும்பத்திற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் சார்பாக நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது. ஷேன் வோர்னின் குடும்பம் சார்பாக அதனை ஆஸி. கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி நிக் ஹாக்லி பெற்றுக்கொண்டார்.



# முதல் நாளிலேயே 212 ஓட்டங்களில் சுருண்ட இலங்கை அணி



சுற்றுலா அவுஸ்திரேலியா அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. இருதரப்பு தொடரில் முன்னதாக நடைபெற்ற இருபதுக்கு 20 சர்வதேச தொடரை அவுஸ்திரேலிய அணி கைப்பற்றிய நிலையில், அடுத்து நடைபெற்ற ஒருநாள் தொடரை இலங்கை அணி கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில், அடுத்த தொடரான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. இலங்கை அணியில் சுழற்பந்துவீச்சாளர் ஜெஃப்ரி வெண்டர்சே டெஸ்ட் அறிமுகத்தை பெற்றுக்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முதல் நாளிலேயே சகல விக்கெட்டுகளையும் இழந்து 212 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. நிரோஷன் டிக்வெல்ல மாத்திரம் நிலைத்தாடி இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். அவர் அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். அனுபவ வீரர்களான அஞ்சலோ மெத்யூஸ் ஓட்டங்களைக் குவித்தார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் சுழற்பந்துவீச்சாளர் நைதன் லையன் 5 விக்கெட்டுகளையும், மிட்செல் சுவீப்சன் 3 விக்கெட்டுகளையும் அதிகபட்சமாக வீழ்த்தினர். பதிலுக்கு தங்களது முதல் இன்னிங்ஸில் ஆடிவரும் அவுஸ்திரேலிய அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களை பெற்றுள்ளது. இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7